# மாதாந்திர நடப்பு நிகழ்வுகள் - ஜனவரி 1 – 31, 2025



| வ. எண். | தலைப்புகள் | பக்க எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலங்கள் | 9 |
| 3 | தேசிய நிகழ்வுகள் | 10 |
| 4 | திட்டங்கள் | 17 |
| 5 | சர்வதேச நிகழ்வுகள் | 20 |
| 6 | இந்தியாவும் இதர நாடுகளும் | 21 |
| 7 | மாநாடுகளும் உச்சி மாநாடுகளும் | 23 |
| 8 | குழுக்கள் | 25 |
| 9 | பாதுகாப்பு | 26 |
| 10 | பொருளாதாரம் | 30 |
| 11 | நியமனங்கள் | 32 |
| 12 | விருதுகள் | 34 |
| 14 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 37 |
| 15 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 40 |
| 16 | விளையாட்டுகள் | 50 |
| 17 | நினைவில் நின்றவர்கள் | 53 |
| 18 | அறிக்கைகள் | 55 |
| 19 | தரவரிசைப் பட்டியல் | 58 |
| 20 | முக்கிய தினங்கள் | 59 |
| 21 | த.நா.அ.ப.தே முந்தைய ஆண்டு கேட்கப்பட்ட வினாக்கள் | 62 |


APOLLO STUDY CENTRE

# தமிழ்நாடு

➢ **இந்தியாவின் முதல் கண்ணாடி கடல் பாலத்தை தமிழ்நாடு திறந்து வைத்துள்ளது**

✓ தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் பாறை நினைவகத்தை இணைக்கும் இந்தியாவின் முதல் கண்ணாடி பாலத்தை திறந்து வைத்தார்.



✓ திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டதன் வெள்ளி விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, கன்னியாகுமரியில் உள்ள உயரமான சிலைக்கு "ஞானத்தின் சிலை" என்று அதிகாரப்பூர்வமாக பெயரிடுவது உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது.

✓ 37 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 10 மீட்டர் அகலம் கொண்ட இந்த பாலம், 77 மீட்டர் நீளம் கொண்டதாகும். பார்வையாளர்கள் இதன்வழியே கடலுக்கு அடியில் உள்ள இரண்டு அடையாளங்களுக்கு இடையே பாதுகாப்பாக நடக்க முடியும்.

➢ **ஐந்தாவது காவல் ஆணையம் முக்கிய சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்துள்ளது**

✓ சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் சி.டி. செல்வம் தலைமையிலான ஐந்தாவது காவல் ஆணையம், தனது இறுதி அறிக்கையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம், வெள்ளிக்கிழமை அன்று சென்னையில் சமர்ப்பித்தது.




✓ காவல்துறை வட்டாரங்களின்படி, இந்த அறிக்கையானது ஆட்சேர்ப்பு, பயிற்சி, காவல் பணி மற்றும் பணப் பலன்கள் உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை பரிந்துரைத்துள்ளது.

✓ 2022 ஜனவரியில், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கே. அலாவுதீன், ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ் அதிகாரி கே. ராதாகிருஷ்ணன், பிரபல மனநல மருத்துவர் சி. ராமசுப்பிரமணியம்,

ஓய்வு பெற்ற பேராசிரியர் நளினிராவ் ஆகியோரை உறுப்பினர்களாகவும், மூத்த ஐ.பி.எஸ். அதிகாரியும், காவல் துறை தலைமை இயக்குநருமாகிய மகேஷ்குமார் அகர்வாலை உறுப்பினர் செயலராகவும் கொண்ட ஆணையத்தை அரசு அமைத்தது.

- ✓ இந்த ஆணையம் தனது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க சுமார் மூன்று ஆண்டுகள் ஆனது.

➢ **குறள் வாரம்**

- ✓ இனி ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் கடைசி வாரம், குறள் வாரம் ஆகக் கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை அன்று அறிவித்தார்.




- ✓ கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு நடைபெற்ற இரண்டாம் நாள் விழாவில் சிறப்புரையாற்றிய அவர், திருவள்ளுவர் மற்றும் திருக்குறள் குறித்த தமிழ் அறிஞர்களின் கட்டுரைகள் மற்றும் கவிதைகள் அடங்கிய வெள்ளி விழா நினைவு இதழை வெளியிட்டார்.
- ✓ குன்றக்குடி மடத்தலைவர் பொன்னம்பல அடிகளார் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

➢ **சிந்து சமவெளி நாகரிக எழுத்துக்களைப் புரிந்து கொள்வதற்கு 1 மில்லியன் டாலர் பரிசு**




- ✓ சிந்து சமவெளி நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டு நூற்றாண்டு நிறைவடைந்ததைக் குறிக்கும் முக்கிய அறிவிப்பில், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மர்மமாக விளங்கும் சிந்து சமவெளி எழுத்துருக்களைப் புரிந்து கொள்வதில் வெற்றிபெறும் நிபுணர்கள் அல்லது நிறுவனங்களுக்கு 1 மில்லியன் டாலர் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார்.

✓ சென்னையில் மூன்று நாட்கள் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் பேசிய முதலமைச்சர், இந்த பழங்கால எழுத்துக்களைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும் ஆராய்ச்சி மற்றும் தொல்பொருள் முயற்சிகளை ஆதரிப்பதில் தமிழகத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

➢ **அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை முறையில் கோவையில் செயற்கை நுண்ணறிவு வசதி**

✓ அரசு மற்றும் தனியார் கூட்டாண்மை முறையில், கோவையில் செயற்கை நுண்ணறிவுக்கான 2 மில்லியன் சதுர அடி வசதியை மாநில அரசு அமைக்கும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வியாழக்கிழமை அன்று தெரிவித்தார்.




✓ "தொழில்நுட்பத்தில் வளர்ந்து வரும் மாற்றங்களுக்கு ஏற்ப, செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின், இண்டர்நெட் ஆப் திங்ஸ் மற்றும் மின்சார வாகனங்கள் போன்ற உருமாற்றத் துறைகளை மாநில அரசு தீவிரமாகப் பின்பற்றுகிறது" என்று மாநில தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு உச்சி மாநாடு - 'Umagine TN-2025' - இன் மூன்றாம் பதிப்பின் தொடக்கத்தில் அவர் கூறினார்.

➢ **பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காக மாநில அரசு புதிய பாலியல் மசோதாக்களை கொண்டு வந்துள்ளது**

✓ தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கான தண்டனையை அதிகரிக்கவும், டிஜிட்டல் மற்றும் மின்னணு தளங்களில் அவர்களைத் துன்புறுத்துபவர்களுக்கு எதிராக வழக்கு தொடரவும் இரண்டு மசோதாக்களை சட்டப்பேரவையில் வெள்ளிக்கிழமை அன்று தாக்கல் செய்தார்.



- ✓ பாரதிய நியாய சன்ஹிதா, 2023, பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023 ஆகியவற்றின் தமிழ்நாட்டுக்கான பயன்பாட்டில், திருத்தங்களை மேற்கொள்ள குற்றவியல் சட்டங்கள் (தமிழ்நாடு திருத்தம்) மசோதா 2025 முயல்கிறது.
- ✓ இரண்டாவது மசோதா, தமிழ்நாடு பெண்கள் துன்புறுத்தல் தடைச் சட்டம், 1998ஐத் தகுந்த முறையில் திருத்துவதற்கு வழிவகை செய்கிறது.

**➢ பாலியல் வன்கொடுமை வழக்குகளை விசாரிப்பதற்காக ஏழு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்**

- ✓ முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பெண்கள்மீதான பாலியல் வன்கொடுமை வழக்குகளை ஏழு சிறப்பு நீதிமன்றங்கள் விசாரிக்கும் என்று சனிக்கிழமை அன்று அறிவித்தார்.




- ✓ இந்த சிறப்பு நீதிமன்றங்கள் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், திருச்சி மற்றும் சென்னை மற்றும் அதன் அண்டை மாவட்டங்களில் ஒன்றில் அமைக்கப்படும்.
- ✓ சட்டப் பேரவையில் ஆளுநர் உரைக்கு ஸ்டாலின் அளித்த பதிலில், அனைத்து மாவட்டங்களிலும் பாலியல் வன்கொடுமை வழக்குகளை விரைந்து முடிக்க கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் சிறப்புக் குழு அமைக்கப்படும் என்றார்.

**➢ புலம்பெயர் மக்களுக்கு தமிழ் மற்றும் நாட்டுப்புறக் கலைகளில் பயிற்சி அளிக்க தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது**

- ✓ தமிழ் மொழியையும், மாநிலத்தின் நாட்டுப் புறக் கலைகளையும் இசையையும் புலம்பெயர்ந்த இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதற்கான பயிற்சித் திட்டத்தை மாநில அரசு கொண்டு வந்துள்ளது.



- ✓ இத்திட்டத்தின்கீழ் 100 ஆசிரியர்கள் மற்றும் தமிழக் கலைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்றும், அவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ஞாயிற்றுக்கிழமை அன்று தெரிவித்தார்.
- ✓ 2025ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் புலம்பெயர் தமிழர் தின விழாவில் கலந்து கொண்டு பேசிய திரு. மு.க. ஸ்டாலின், வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து இரண்டு ஆண்டுகளுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படும் என்று தெரிவித்தார்.
- ✓ இதற்காக அரசு ரூ.10 கோடியை ஒதுக்கும் என்று கூறிய அவர், 'எத்திசையும் தமிழனங்கே' நிகழ்ச்சிக்காக சென்னை வரும் புலம்பெயர்ந்தோர் தங்கள் அடையாளத்தை மறந்துவிட வேண்டாம் என்றும் அழைப்பு விடுத்தார்.

### ➢ 10வது தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா 2025

- ✓ தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவின் 10வது பதிப்பை தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் ஆதரவுடன் 10-19 ஜனவரி 2025 வரை சென்னை, பொள்ளாச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.




- ✓ இந்த 10 நாட்கள் திருவிழாவின்போது, பல்வேறு நாடுகளில் இருந்து ஹாட் ஏர் பலூன்கள் பறக்கவிடப்படும். தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவின் இந்த பத்தாவது பதிப்பில், 8க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பல்வேறு வகையான ஹாட் ஏர் பலூன்கள், அனைத்து அழகான மற்றும் தனித்துவமான வடிவங்கள் மற்றும் வண்ணங்களைக் காணலாம்.

### ➢ நம்ம பள்ளி நம்ம ஊரு பள்ளி

- ✓ 'நம்ம பள்ளி நம்ம ஊரு பள்ளி' முயற்சியானது, திருச்சி மண்டலத்திற்கான 31 நிறுவனங்களிடமிருந்து 141 கோடி ரூபாய்க்கான உறுதிமொழிகளை செவ்வாய்க்கிழமை அன்று அதன் மண்டல மாநாட்டின்போது பெற்றது.



- ✓ திருச்சி மண்டலமானது, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் கரூர் போன்ற மாவட்டங்களை உள்ளடக்கியதாகும்.
- ✓ இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, பள்ளிக்கல்வித் துறையானது, அரசுப் பள்ளி முன்னாள் மாணவர்களை இணைப்பதற்காகவும், பள்ளி வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்ட 'பள்ளிச்சாளரம்' (PalliChaalaram) என்ற இணையப் பக்கத்தை அறிமுகப்படுத்தியது.

- ➢ **தமிழ்நாட்டின் இரும்புக் கால கண்டுபிடிப்பானது, உலக உலோகவியல் வரலாற்றை மாற்றியமைக்கிறது**
- ✓ சமீபத்திய தொல்பொருள் கண்டுபிடிப்புகள் இந்தியாவின் இரும்புக் காலத்தைப் பற்றிய நமது புரிதலை மாற்றியமைத்துள்ளன.




- ✓ தமிழ்நாட்டின் இரும்புக் தொழில்நுட்பம் கி.மு. 4ஆம் மில்லினியத்தின் தொடக்கத்தில் இருந்ததாக ஒரு புதிய ஆய்வு சுட்டிக் காட்டுகிறது.
- ✓ 1500 மற்றும் 2000 ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவில் இரும்பு வயது தொடங்கியது என்ற முந்தைய நம்பிக்கைகளை இந்த கண்டுபிடிப்பு எதிர்க்கிறது.
- ✓ பாரம்பரியமாக, இரும்பு தொழில்நுட்பத்தின் தோற்றம் கி.மு. 1300 இல் ஹிட்டிட் பேரரசு காலத்தில் நிகழ்ந்திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.
- ✓ தமிழ்நாட்டின் கண்டுபிடிப்புகள் இந்தக் கருத்தை எதிர்க்கின்றன. அதாவது, தென்னிந்தியாவில் மேம்பட்ட இரும்பு உருக்குதல் மிகவும் முன்னதாகவே நிகழ்ந்தன என்பதை அவை குறிக்கின்றன.

# மாநிலங்கள்

➢ **கவாச்சம் (KaWaCHaM)**

✓ இந்தியாவின் முதல் முழுமையான ஒருங்கிணைந்த பேரிடர் எச்சரிக்கை அமைப்பாகிய கவாச்சம் (Kerala Warnings, a Crisis and Hazard Management System - கேரள எச்சரிக்கைகள், ஒரு நெருக்கடி மற்றும் அபாய மேலாண்மை அமைப்பு) - ஐ கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தொடங்கி வைத்தார்.




✓ இந்த கவாச்சம் அமைப்பு தேசிய சூறாவளி இடர் குறைப்புத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டது.

✓ இந்த கவாச்சம் அமைப்பு உலகின் வேகமான வானிலை எச்சரிக்கை அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது காலநிலை மாற்றத்தால் இயக்கப்படும் தீவிர வானிலை நிகழ்வுகளின்போது மீட்பு மற்றும் மறுவாழ்வு முயற்சிகளை மேம்படுத்தும்.

➢ **ஒரே மாதிரியான சிவில் சட்டத்தை உத்தராகண்ட் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது**




✓ உத்தரகாண்ட் முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமி, திங்களன்று, மாநிலத்திலிருந்து வெளியேறிய பழங்குடியினர் மற்றும் பூர்வீகவாசிகளைத் தவிர, மாநிலத்தில் வசிக்கும் அனைவருக்கும் ஒரே மாதிரியான குடிமைச் சட்டத்தை அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தினார்.

✓ இதன்மூலம், சுதந்திரத்திற்குப் பிறகு ஒரே மாதிரியான சிவில் சட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் இந்திய மாநிலமாக உத்தரகாண்ட் ஆனது.

# தேசிய நிகழ்வுகள்

- **இந்தியாவின் பசுமை இல்ல வாயு வெளியேற்றம் (India's Greenhouse Gas Emissions)**

✓ பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான இந்தியாவின் முயற்சிகள் பலனளித்துள்ளன. ஏனெனில், நாட்டின் உமிழ்வு முந்தைய ஆண்டை விட 2020இல் 7.93 விழுக்காடு குறைந்துள்ளது.



✓ 2005 முதல் 2020 வரை இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உமிழ்வு தீவிரம் 36 விழுக்காடு குறைந்துள்ளது என்பதை ஐ.நா காலநிலை மாற்ற அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தரவு வெளிப்படுத்துகிறது.

✓ இந்தியா அதன் காலநிலை இலக்குகளுக்கான பாதையில் உள்ளது. இது 2030ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உமிழ்வு தீவிரத்தை 45 விழுக்காடாகக் குறைத்து, புதைபடிமற்ற எரிபொருளில் இருந்து 50 விழுக்காடு மின்சார ஆற்றலை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **இந்தியாவின் மொத்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன்**

✓ 2024ஆம் ஆண்டில் இந்தியாவின் எரிசக்தி அளவை மாற்றுவதற்கான தனது குறிப்பிடத்தக்க பயணத்தை ஒன்றிய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.



✓ இந்த முன்னேற்றம் இந்தியாவின் பஞ்சாமிர்த இலக்குகளுக்கு ஏற்ப 500 ஜிகாவாட் புதைபடிவமற்ற எரிபொருள் ஆற்றலை அடைவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கு ஏற்ப உள்ளது.

- ✓ பிப்ரவரி 2024இல், அரசு ஒரு கோடி வீடுகளில் கூரை சூரிய தகடுகளை நிறுவுவதற்காக பிரதமரின் சூர்யா கர்: முப்டி பிஜ்லி யோஜனா (**PM Surya Ghar: Muft Bijli Yojana**) என்ற திட்டத்தை அறிமகப்படுத்தியது.
- ✓ 2030க்குள் புதைபடிவ எரிபொருள் இறக்குமதியை ஒரு இலட்சம் கோடி குறைக்கவும், கார்பன் வெளியேற்றத்தை ஐந்து மில்லியன் மெட்ரிக் டன் குறைக்கவும், 600 கோடி ரூபாய் செலவில் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கமும் தொடங்கப்பட்டது.

## ➢ பாரத்போல் (BHARATPOL) போர்ட்டல்

- ✓ பாரத்போல் போர்ட்டலை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார். இந்த போர்ட்டலை மத்திய புலனாய்வு அமைப்பு உருவாக்கியுள்ளது.




- ✓ இந்தப் போர்ட்டலானது சர்வதேச உதவிக்கான அனைத்து கோரிக்கைகளையும் இன்டர்போல் மூலம் செயல்படுத்தும்.
- ✓ இந்தக் கோரிக்கைகளில் சிவப்பு அறிவிக்கைகள் மற்றும் பிற வண்ணம் குறிப்பிடப்பட்ட இன்டர்போல் அறிவிப்புகள் ஆகியவை அடங்கும்.
- ✓ பாரத்போல் போர்ட்டல் இந்திய சட்ட அமலாக்க நிறுவனங்களுக்கு உதவும்.

## ➢ இந்தியாவின் முதல் ஆர்கானிக் மீன் கூட்டம் (Organic Fish Cluster)

- ✓ இந்தியாவின் முதல் ஆர்கானிக் மீன் கூட்டத்தை சிக்கிம் அரசு கூட்டியுள்ளது. ஒன்றிய கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் ரஞ்சன் சிங், சிக்கிமில் இந்தியாவின் முதல் ஆர்கானிக் மீன் கூட்டத்தைத் திறந்து வைத்தார்.




- ✓ இதன் முதன்மை நோக்கம், ஆண்டிபயாடிக், இரசாயனம் மற்றும் பூச்சிக்கொல்லி இல்லாத ஆர்கானிக் மீன்களை விற்பனை செய்வதாகும். ரஞ்சன்சிங், பிரதம மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா திட்டத்தின் (Pradhan MantriMatsyaSampadaYojana) கீழ், 50 கோடி மதிப்பிலான 50 முக்கிய திட்டங்களைத் தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டினார்.

- ✓ இரசாயனங்கள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள் மற்றும் பூச்சிக் கொல்லிகளைத் தவிர்த்து, சுற்றுச் சூழல் ரீதியாக ஆரோக்கியமான மீன் வளர்ப்பு அமைப்பில் கரிம மீன்வளக் கூட்டம் கவனம் செலுத்தும்.

- ➢ **தென்னிந்தியாவின் முதல் தொற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் கண்டறியும் ஆய்வகம்**
- ➢ பெங்களூரு மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (Bangalore Medical College and Research Institute) தென்னிந்தியாவின் முதல் தொற்றுநோய் கண்டறியும் ஆய்வகத்தை நிறுவும்.




- ✓ இந்த ஆய்வகம் பாக்டீரியா, பூஞ்சை மற்றும் ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய்களில் கவனம் செலுத்தும்.
- ✓ இது விரைவான நோயறிதல் மற்றும் அத்தகைய நிலைமைகளின் மேம்பட்ட மேலாண்மை ஆகியவற்றை செயல்படுத்தும்.
- ✓ நாடு முழுவதும் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் சிறப்பு ஆய்வகங்களை நிறுவுவதற்கான அரசின் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டத்தின்கீழ், பாக்டீரியவியல், மைகாலஜி மற்றும் ஒட்டுண்ணியியல் போன்ற பகுதிகளில் திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்தப்படும்.

- ➢ **இந்தியாவின் மொத்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் 209.44 ஜிகா வாட்களை எட்டியது**
- ✓ இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை, குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.



- ✓ டிசம்பர் 2024 நிலவரப்படி, நாட்டின் மொத்த நிறுவு திறன் 209.44 ஜிகா வாட்களை எட்டியுள்ளது.
- ✓ இந்த நிறுவுதிறன் 2023 டிசம்பரில் 180.80 ஜிகா வாட்டிலிருந்தது, 2024 டிசம்பரில் 209.44 ஜிகா வாட்டாக, 15.84 விழுக்காடு அதிகரித்துள்ளது.

- ✓ 2024ஆம் ஆண்டில், இந்தியா மொத்தம் 28.64 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனைச் சேர்த்துள்ளது.
- ✓ இந்த அதிகரிப்பு, தூய்மையான எரிசக்திக்கான மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கும் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் அரசின் மூலோபாய முயற்சிகளின் ஒரு பகுதியாகும்.

**➢ இந்தியாவின் 'தங்க மசாலா' (Golden Spice) வை உயர்த்துவதற்காக தேசிய மஞ்சள் வாரியம் தொடங்கப்பட்டது.**




- ✓ ஜனவரி 14, 2025 அன்று, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் ஸ்ரீபியூஸ் கோயல், புது தில்லியில் தேசிய மஞ்சள் வாரியத்தைத் தொடங்கி வைத்தார். அதன். முதல் தலைவராக ஸ்ரீ பல்லே கங்கா ரெட்டியை அவர் நியமித்தார்.
- ✓ இந்த வாரியத்தின் தலைமையகம் மஞ்சள் உற்பத்தி செய்யும் ஒரு முக்கிய பிராந்தியமாகிய, தெலுங்கானாவின் நிஜாமாபாத்தில் நிறுவப்பட்டுள்ளது.

**➢ காஷ்மீரில் இசட் மார்க் (Z-Morh) சுரங்கப் பாதையை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.**

- ✓ மத்திய காஷ்மீரில் உள்ள கந்தர்பால் மாவட்டத்தில் 6.5 கிமீ இசட் மார்க் சுரங்கப்பாதையை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.




- ✓ கந்தர்பால் மாவட்டத்தில் உள்ள ககங்கிர் (Gagangir) மற்றும் சோனாமார்க் (Sonamarg) நகரங்களை இணைக்கும் 6.5 கிமீ நீளமுள்ள இருவழிச் சுரங்கப்பாதை 2,700 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது.
- ✓ கடல் மட்டத்திலிருந்து 8,650 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த இசட்-மார்க் சுரங்கப் பாதையானது ஸ்ரீநகர் மற்றும் சோனாமார்க் இடையே ஆண்டு முழுவதும் தொடர்பை

கணிசமாக மேம்படுத்தும், மேலும், நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளைத் தவிர்த்து லே-க்கு செல்லும் பாதையை எளிதாக்கும்.

- **காசி தமிழ் சங்கமம் 3.0 வெளியீடு**
  - ✓ காசி தமிழ் சங்கமம் 3.0 பதிவு போர்ட்டலை மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்தார்.




- ✓ இந்த நிகழ்வு 2025 பிப்ரவரி 15 முதல் 24 வரை உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசியில் நடைபெற உள்ளது. இந்த முன்முயற்சியானது, தமிழ்நாடு மற்றும் காசிக்கு இடையேயான கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதை நோக்மாகக் கொண்டுள்ளது, அவற்றின் பகிரப்பட்ட பாரம்பரியத்தைக் கொண்டாடுகிறது.
- ✓ காசி தமிழ் சங்கமம் 3.- பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் உத்தரப் பிரதேச அரசுடன் இணைந்து கல்வி அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இது கலாச்சார பரிமாற்றம் மற்றும் கற்றலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **டாக்டர். ஜெய்சங்கரின் ஸ்பெயின் பயணத்தின்போது இந்தியாவும் ஸ்பெயினும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன**
  - ✓ இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும் ஆழப்படுத்தவும் இந்தியாவும் ஸ்பெயினும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.




- ✓ இந்த ஒப்பந்தங்கள் விளையாட்டு மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சியில் ஒத்துழைப்பை மையப்படுத்தியவையாகும்.
- ✓ வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கரின் ஸ்பெயின் பயணத்தின்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

- ✓ பெட்ரோ சான்செஸின் (Pedro Sanchez) வருகையின்போது, இரு நாடுகளும் 2026ஆம் ஆண்டை ‘கலாச்சார, சுற்றுலா மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆண்டாகக்‘ கொண்டாட முடிவு செய்தன.

## ➢ இந்தியாவின் முதல் eVTOL ஏர் டாக்சி ‘ஷுன்யா’ (Shunya)

- ✓ பெங்களூரை மையமாகக் கொண்ட ஒரு விண்வெளி புத்தொழில் நிறுவனமான சர்லா ஏவியேஷன் என்ற நிறுவனம், இந்தியாவின் முதல் மின்சார செங்குத்து டேக்-ஆப் மற்றும் லேண்டிங் (eVTOL) ஏர் டாக்சி முன்மாதிரியான ‘ஷுன்யா’வை அறிமுகப்படுத்தியது.




- ✓ இது இந்திய நகரங்களில் போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசுபாட்டைக் குறைக்கும் நோக்கத்தில் நகர்ப்புற காற்று இயக்கத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

## ➢ இந்தியாவின் 76வது குடியரசு தின மையக் கருத்து

- ✓ ஜனவரி 26, 2025 அன்று இந்தியாவின் 76வது குடிரசு தின அணி வகுப்பில், 16 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் மற்றும் 10 அமைச்சகங்கள் / துறைகள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அலங்கார ஊர்திகளின் துடிப்பான காட்சி இடம்பெற்றது.




- ✓ இந்த நாளுக்கான ‘ஸ்வர்னிம் பாரத் - விராசத் ஔர் விகாஸ் (Swarnim Bharat – Virasat Aur Vikas) என்ற மையக் கருத்து, இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தையும், வளர்ச்சியை நோக்கிய அதன் முற்போக்கான பாதையையும் குறிக்கிறது.
- ✓ இந்த நிகழ்வு நாட்டின் பலதரப்பட்ட பலம் மற்றும் கலாச்சார உள்ளடக்கத்தை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **தேசிய அதிமுக்கிய கனிம இயக்கம் (National Critical Mineral Mission)**

- ✓ இந்திய அரசு, ரூ.16,300 கோடி பட்ஜெட்டில் தேசிய அதிமுக்கிய கனிமப் பணிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.




- ✓ இந்த முன்முயற்சியானது, உயர் தொழில்நுட்பத் தொழில்கள் மற்றும் சுத்தமான எரிசக்திக்கு அவசியமான முக்கியமான கனிமங்களில் இந்தியாவின் தன்னம்பிக்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ 2024-25 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் நிதியமைச்சர் இந்தத் திட்டத்தை அறிவித்தார்.
- ✓ தேசிய அதிகமுக்கியத்துவம் வாய்ந்த கனிம இயக்கமானது, இறக்குமதி செய்யப்பட்ட முக்கியமான கனிமங்களை நம்பியிருப்பதைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்தத் திட்டமானது ஆத்மநிர்பர் பாரத் முன்முயற்சியுடன் இணைந்து, கனிமத் துறையில் உள்ள சவால்களை எதிர்கொள்ள முற்படுகிறது.

# திட்டங்கள்

- **பிரதமரின் ஃபாசல் பீமா யோஜனா (PM Fasal BimaYojana)**

✓ பிரதமரின் ஃபாசல் பீமா யோஜனா மற்றும் மறுசீரமைக்கப்பட்ட வானிலை அடிப்படையிலான பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தில் சேர்வதற்கான காலக்கெடுவை 2025-26 வரை நீட்டிக்க ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது.




✓ இந்தத் திட்டத்தின் ஒட்டுமொத்தச் செலவு 69 ஆயிரத்து 515 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

✓ விவசாயிகளுக்கு 50 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு ஆயிரத்து 350 ரூபாய்க்கு டிஏபி தொடர்ந்து கிடைக்கும்.

✓ இது விவசாயிகளுக்கு மானியம், மலிவு மற்றும் நியாயமான விலையில் டிஏபி கிடைப்பதை உறுதி செய்யும்.

✓ பிரதமரின் ஃபாசல் பீம யோஜனா திட்டம் 18 பிப்ரவரி 2016 அன்று தொடங்கப்பட்டது.

- **ஒரு நாடு ஒரு சந்தா (One Nation One Subscription)**

✓ ஜனவரி 1, 2025 அன்று தொடங்கப்பட்ட, ஒரு நாடு ஒரு சந்தா என்ற முயற்சியானது, இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.




✓ இந்தத் திட்டம், நாட்டின் அரசு உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் ஒன்றிய அரசின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு சர்வதேச அறிவார்ந்த இதழ்கள் மற்றும் கட்டுரைகளுக்கான விரிவான அணுகலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

➢ **மிஷன் மௌசம் (Mission Mausam)**

✓ இந்திய வானிலை ஆய்வு மையத்தின் 150 நிறுவன தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடி மிஷன் மௌசம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். 'மிஷன் மௌசம்' இந்தியாவை வானிலைக்குத் தயாரான மற்றும் காலநிலை ஸ்மார்ட் நாடாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




✓ அதிநவீன வானிலை கண்காணிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் அமைப்புகளை மேம்படுத்துவதன்மூலம் இந்தியாவை வானிலைக்குத் தயாரான மற்றும் காலநிலை ஸ்மார்ட் நாடாக மாற்றுவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

✓ இது வானிலை மற்றும் காலநிலை செயல்முறைகள் பற்றிய புரிதலை மேம்படுத்துவதிலும், காற்றின் தரத்தரவை வழங்குவதிலும் கவனம் செலுத்தும்.

✓ வானிலை மீள்தன்மை மற்றும் காலநிலை மாற்றம் தழுவலுக்கான ஐ.எம்.டி தொலைநோக்கு 2047 ஆவணமும் பிரதமர் மோடியால் வெளியிடப்பட்டது.

➢ வைரம் இம்ப்ரெஸ்ட் அங்கீகாரத் திட்டம் (**Diamond Imprest Authorization Scheme)**

✓ ஏப்ரல் 1, 2025 அன்று, இந்தியா வைரம் இம்ப்ரெஸ்ட அங்கீகார திட்டத்தைச் செயல்படுத்தும்.




✓ இந்தத் திட்டம் வைர உற்பத்தியாளர்களுக்கு உள்ளூர் செயலாக்க வசதிகளை நிறுவுவதற்குத் தேவைப்படும் உலகளாவிய நன்மை கொள்கைகளுக்கான ஒரு மூலோபாய பிரதிபலிப்பாகும். இது ஏப்ரல் 1, 2025 முதல் அமலுக்கு வரும்.

✓ இந்த வைரம் இம்ப்ரெஸ்ட் அங்கீகாரத் திட்டமானது, மதிப்பு கூட்டுதலை மேம்படுத்தி, ஏற்றுமதியைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டு, இயற்கையாக வெட்டப்பட்ட அல்லது பளபளப்பான வைரங்களை வரியில்லாமல் இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கிறது.

✓ இந்தத் திட்டம் தேவையான ஆதரவு மற்றும் ஊக்கங்களை வழங்குவதன் மூலம் துறைக்கு புத்துயிர் அளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- **குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ரூ.100 கோடி கடன் உத்தரவாதத் திட்டம்**
- ✓ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் உற்பத்தித் துறையை மேம்படுத்தும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, இந்திய அரசு ரூ.100 கோடியில் பரஸ்பர கடன் உத்தரவாதத் திட்டத்தை (Mutual Credit Guarantee Scheme) அறிமுகப்படுத்தியுள்ளது.




- ✓ இந்த முன்முயற்சியானது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான கடன் கிடைப்பதை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பிணையத் தேவையின்றி அத்தியாவசிய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைப் பெறுவதை எளிதாக்குகிறது.

APOLLO STUDY CENTRE

# சர்வதேச நிகழ்வுகள்

- **சீனா உலகின் மிக அதிக வேகமான அதிவேக இரயில் முன் மாதிரியை வெளியிட்டது**
- ✓ உலகின் அதிவேக இரயில் முன்மாதிரியான சிஆர்450ஐ சீனா அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் சோதனை வேகம் மணிக்கு 450 கிமீ ஆகும்.




- ✓ தற்போதைய சிஆர் 400 ∴பக்சிங் (CR400 Fuxing) இரயில்களை (மணிக்கு 350 கிமீ) விஞ்சும் வகையில், சிஆர் 450 ஆனது இரயில் தொழில்நுட்பத்தில் ஒரு திருப்பு முனையைக் குறிக்கிறது. இதில் ஆற்றல், திறன், பாதுகாப்பு மற்றும் பயணிகளின் வசதி ஆகியவற்றில் முன்னேற்றத்துடன் வேகமும் இணைந்துள்ளது.
- ✓ 2035ஆம் ஆண்டுக்குள் அதிவேக இரயில் வலையமைப்பை 70,000 கிமீ வரை விரிவுபடுத்தும் சீனாவின் இலட்சிய திட்டங்களுடன் இந்தக் கண்டுபிடிப்பு இணைந்துள்ளது. இது உலகளாவிய இரயில் அமைப்புகளில் அதன் தலைமையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

- **உலக சுகாதார அமைப்பில் இருந்து அமெரிக்கா விலகியுள்ளது**
- ✓ கோவிட்-19 பெருந்தொற்றை உலக சுகாதார அமைப்பு மோசமாக நிர்வகித்ததாலும், சீர்திருத்தம் இல்லாததாலும், அமெரிக்கா அந்த அமைப்பிலிருந்து விலகியுள்ளது.




- ✓ உலக சுகாதார அமைப்பு மற்றும் பாரிஸ் காலநிலை ஒப்பந்தத்தில் இருந்து விலகும் முடிவை டிரம்ப் எடுத்துள்ளார்.
- ✓ கோவிட் பெருந்தொற்றின்போது உலக சுகாதார அமைப்பின் பங்கு காரணமாக அமெரிக்கா வெளியேறுகிறது என்று டிரம்ப் கூறினார்.
- ✓ உலக சுகாதார அமைப்பு சீனாவுக்கு மிகவும் அனுதாபம் காட்டுவதாக டிரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு விமர்சித்து, உலக சுகாதார அமைப்பில் இருந்து விலகியது.
- ✓ உலக சுகாதார அமைப்பின் நிதியுதவியில் தோராயமாக 90 விழுக்காடு சீனாவின் பங்களிப்பு ஆகும்.

# இந்தியாவும் இதர நாடுகளும்

➢ **இந்தியாவும் ஸ்பெயினும்**

✓ இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தவும், ஆழப்படுத்தவும் இந்தியாவும் ஸ்பெயினும் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.



✓ இந்த ஒப்பந்தங்கள் விளையாட்டு மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சியில் ஒத்துழைப்பை மையப்படுத்தியவை ஆகும்.

✓ வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கரின் ஸ்பெயின் பயணத்தின்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

✓ பெட்ரோ சான்செஸின் வருகையின்போது, இரு நாடுகளும் 2026ஆம் ஆண்டை ‘கலாச்சார, சுற்றுலா மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆண்டாக’ கொண்டாட முடிவு செய்தன.

➢ **இந்தியாவும் இந்தோனேசியாவும்**

✓ இந்தியாவும் இந்தோனேசியாவும் இருதரப்பு ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதற்காக புதிய முயற்சிகளை அறிவித்துள்ளன.




✓ இரு தரப்பும், சுகாதார ஒத்துழைப்பு, டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.

✓ ஃபின்டெக், செயற்கை நுண்ணறிவு, இன்டர்நெட் ஆப் திங்க்ஸ் மற்றும் டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்களில் ஒத்துழைக்க இரண்டு நாடுகளும் ஒப்புக் கொண்டன.

✓ இந்தோனேசிய அதிபர் பிரபோவோ சுபியாண்டோ இந்த ஆண்டு குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

APOLLO STUDY CENTRE

# மாநாடுகளும் உச்சி மாநாடுகளும்

## ➢ ஜீனோம் இந்தியா தரவு கூட்டம் (Genome India Data Conclave)

✓ மரபணுவியலில் இந்தியா தன்னிறைவை நோக்கி முன்னேறியுள்ளது.




✓ புதுதில்லியில் நடைபெற்ற ஜீனோம் இந்தியா தரவுக் கூட்டத்தில், மத்திய அமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங், 'இந்தியா இப்போது அதன் சொந்த மரபணு தரவுகளைக் கொண்டுள்ளது' என்று அறிவித்தார்.

✓ வெளிநாட்டு மரபணு தரவுகளின் மீதான சார்ந்திருத்தலை இது குறைப்பதால், இந்த சாதனை தேசத்திற்கு மிக முக்கியமான தருணத்தைக் குறிக்கிறது.

✓ இந்த முயற்சியானது தனிப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியில் முன்னேற்றங்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ விக்சித் பாரத் இளம் தலைவர்கள் பேச்சுவார்த்தை

✓ இளைஞர் விவகாரத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட விக்சித் பாரத் இளம் தலைவர்கள் பேச்சுவார்த்தை 2025, ஜனவரி 10, 2025 அன்று புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் தொடங்கியது.




✓ தேசிய இளைஞர் விழாவின் மறுவடிவமான இந்த நிகழ்வானது, இளைஞர்களின் தலைமைத்துவத்தைக் கொண்டாடுதல், கருப்பொருள் விவாதங்கள், ஆக்கப்பூர்வமான போட்டிகள் மற்றும் கலாச்சார அனுபவங்களில் இந்தியா முழுவதும் உள்ள இளம் தலைவர்களை ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ 2047ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த தேசமாக மாறும் இந்தியாவின் தொலைநோக்குப் பார்வைக்குப் பங்களிப்பதற்காக, அடுத்த தலைமுறை தலைவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கு இந்த பேச்சு வார்த்தை முயல்கிறது.

## ➢ உலகப் பொருளாதார மன்றம் 2025

- ✓ உலகப் பொருளாதார மன்றம் 2025 ஆண்டுக் கூட்டம் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் தொடங்கியது.




- ✓ உலகப் பொருளாதார மன்றம் 2025 ஆண்டுக் கூட்டம், ஜனவரி 20 முதல் 24 வரை சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறுகிறது.
- ✓ மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் இந்தியக் குழுவுக்குத் தலைமை தாங்குவார்.
- ✓ இந்தக் கூட்டத்தில், உள்ளடக்கிய வளர்ச்சி, சமூக, இயல் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் ஜனநாயகமாக்கல் தொழில்நுட்பத்தில் முதலீடு போன்ற விஷயங்கள் விவாதிக்கப்படும்.

## ➢ கைத்தறி மாநாடு 'மந்தன்' (Manthan)

- ✓ கைத்தறி மாநாடு 'மந்தன்' - ஐ, ஜவுளித்துறை அமைச்சர் கிரிராஜ் சிங் தொடங்கி வைத்தார். கைத்தறி மாநாடு 'மந்தன்' ஜனவரி 28 அன்று புதுதில்லியில் உள்ள டாக்டர். அம்பேத்கார் சர்வதேச மையமான ஜன்பத்தில் தொடங்கப்படும்.
- ✓ கைத்தறித் துறையின் வளர்ச்சிக்கான சிறந்த நடைமுறைகள், புதுமைகள் மற்றும் உத்திகளைப் புரிந்து கொள்வதற்காக பல்வேறு பங்குதாரர்களை ஒரே இடத்திற்குக் கொண்டு வருவதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.
- ✓ இந்த மாநாட்டில் 21 குழு உறுப்பினர்கள் மற்றும் 120 கைத்தறி பயனாளிகள் அடங்கிய ஏறத்தாழ 250 பங்குதாரர்கள் கலந்து கொள்வார்கள்.

# குழுக்கள்

- **அதிகாரப்பூர்வ புள்ளி விபரங்களுக்கான பெரிய தரவு மற்றும் தரவு அறிவியல் நிபுணர்களின் குழு**

✓ அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களுக்கான பெரிய தரவு மற்றும் தரவு அறிவியல் தொடர்பான ஐ.நா நிபுணர்கள் குழுவில் (UN Committee of Experts on Big Data and Data Science for Official Statistics) இந்தியா இணைந்தது.




✓ அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களுக்கான பெரிய தரவு மற்றும் தரவு அறிவியல் தொடர்பான ஐ.நா நிபுணர்கள் குழுவானது, பெரிய தரவின் நன்மைகள் மற்றும் சவால்களை ஆராய்வதற்காக உருவாக்கப்பட்டது. இதில் நிலையான வளர்ச்சி இலக்குகளை கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவை அடங்கும்.

✓ அதிகரப்பூர்வ புள்ளிவிவர நோக்கங்களுக்காக பெரிய தரவு மற்றும் தரவு அறிவியலைப் பயன்படுத்துவதில் உலகளாவிய தரநிலைகள் மற்றும் நடைமுறைகளை வடிவமைப்பதில் இந்தியா பங்களிக்கும்.

# பாதுகாப்பு

- **இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி 21,000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது.**
- ✓ இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி ஒரு தசாப்தத்திற்கு முன்பு வெறும் 2000 கோடி ரூபாயில் இருந்தது. அது 21000 கோடி ரூபாயை எட்டி, குறிப்பிடத்தக்க எழுச்சியைக் கண்டுள்ளது.




- ✓ மோவ் கண்டோன்மென்டில் உள்ள இராணுவப் போர்க் கல்லூரிக்குச் சென்றபோது, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், 2029-க்குள் ரூ.50,000 கோடி பாதுகாப்பு ஏற்றுமதியை இலக்காக நிர்ணயித்தார்.

- **ராணுவப் பயிற்சி - சூரிய கிரண்**
- ✓ இந்தியா-நேபாளம் கூட்டு இராணுவப் பயிற்சியின் 18வது பதிப்பு ‘சூர்ய கிரண்’ டிசம்பர் 29, 2024 முதல் ஜனவரி 13, 2025 வரை நேபாளத்தின் சல்ஜாண்டியில் தொடங்கியது.




- ✓ இந்த வருடாந்திரப் பயிற்சியானது, காடுகளில் போர், மலைப்பாங்கான பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் சாசனத்தின்கீழ் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் ஆகியவற்றில் இயங்கும் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **உட்கர்ஷ் (Utkarsh**
- ✓ உட்கர்ஷ், 13 ஜனவரி 2025 அன்று சென்னை, காட்டுப்பள்ளியில் உள்ள எல் அண்ட் டி-இல் தொடங்கி வைக்கப்பட்டது.




- ✓ இந்திய கடற்படைக்காக எல் அண்ட் டி கப்பல் கட்டும் தளத்தால் கட்டப்பட்ட இரண்டு பல்நோக்கு கப்பல்களில் உத்கர்ஷ் இரண்டாவது கப்பல் ஆகும்.
- ✓ 'உத்கர்ஷ்' என்றால் 'நடத்தையில் உயர்ந்தவர்' என்று பொருள். 25 மார்ச் 2022 அன்று பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் எல் அண்ட் டி கப்பல் கட்டும் தளம் ஆகியவை இந்தக் கப்பலைக் கட்டத் தொடங்கின. 106 மீட்டர் நீளம் கொண்ட இந்தக் கப்பல்கள் அதிகபட்சமாக 15 நாட் வேகத்தை எட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- ✓ இந்த பல்நோக்குக் கப்பல்கள், கப்பல்களை இழுத்துச் செல்லும் திறன், பல்வேறு இலக்குகளை நோக்கி ஏவுதல் திறன் மற்றும் மீட்கும் திறன் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

➢ **இந்திய இராணுவம் 'டெவில் ஸ்டிரைக்' என்ற பயிற்சியை நடத்துகிறது.**

- ✓ இந்திய ஆயுதப் படைகள் 2025 ஜனவரி 16 முதல்19 வரை ஒரு பெரிய இராணுவப் பயிற்சியை நடத்த உள்ளன.




- ✓ இந்திய இராணுவத்தின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் பயிற்சியானது, அதிக தீவிரம் கொண்ட போர் நடவடிக்கைகளை உருவகப்படுத்துவதன்மூலம் படைகளின் போர் தயார்நிலையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தவும் வெளிப்புற அச்சுறுத்தல்களுக்கு எதிராக பயனுள்ள பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்தப் பயிற்சி மேம்பட்ட உத்திகள் மற்றும் புதுமையான போர் நுட்பங்களைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

➢ **இந்தியா நுண் ஏவுகணை அமைப்பு பார்கவஸ்த்ராவை (Bhargavastra) சோதிக்கிறது**

- ✓ உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நுண் ஏவுகணை அமைப்பான பார்கவஸ்த்ரா, ஒடிசாவின் கோபால்பூர் சீவார்ட் துப்பாக்கி சூடு தளத்தில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.




- ✓ திரள் ட்ரோன் தாக்குதல்களின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக இந்த நுண் ஏவுகணை அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ நாக்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட சோலார் குழுமத்தின் துணை நிறுவனமான பொருளாதார வெடிப்பொருட்கள் லிட் (Economic Explosives Ltd) மூலம் இந்த பார்கவஸ்த்ரா உருவாக்கப்பட்டுள்ளது. இது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது மற்றும் திறள் ட்ரோன் தாக்குதல்களுக்கு எதிராக ஒரு பயனுள்ள குறைந்தவிலை ஆயுத அமைப்பு என்று கூறப்படுகிறது.

## ➢ லா பெரௌஸ் (LA PEROUSE) பயிற்சி

- ✓ உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்ட வழிகாட்டி ஏவுகணை அழிப்பானாகிய ஐஎன்எஸ் மும்பை, இந்த லா பெரௌஸ் பயிற்சியில் பங்கேற்கிறது.




- ✓ இது இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடைபெறும் பல்தரப்பு கடல்சார் பயிற்சியாகும்.
- ✓ இது பிரெஞ்சு கடற்படையால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.
- ✓ ராயல் ஆஸ்திரேலிய கடற்படை, பிரெஞ்சு கடற்படை, ராயல் நேவி, யுனைடெட் ஸ்டேட்ஸ் நேவி, இந்தோனேசிய கடற்படை, ராயல் மலேசியன் நேவி, சிங்கப்பூர் நேவி மற்றும் ராயல் கனேடியன் நேவி உள்ளிட்ட பல்வேறு கடல்சார் பங்குதாரர்களிடமிருந்து பணியாளர்கள் / மேற்பரப்பு மற்றும் துணை மேற்பரப்பு சொத்துக்களின் பங்கேற்பை இந்தப் பதிப்பில் காணலாம்.

➢ **சஞ்சய் (SANJAY) - போர்க்கள கண்காணிப்பு அமைப்பு**

✓ இராணுவ அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், புதுதில்லியின் சவுத் பிளாக்கில் இருந்து 'சஞ்சய்' என்ற போர்க்கள கண்காணிப்பு அமைப்பு (SANJAY – The Battlefield Surveillance System)-ஐ கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.




✓ உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு இந்தியாவின் பாதுகாப்பு தொழில்நுட்பத்தில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது. இந்திய இராணுவத்தின் கண்காணிப்புத் திறன்களை வலுப்படுத்துகிறது.

✓ போர்க்களத்தில் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தவும், சூழ்நிலை விழிப்புணர்வை மேம்படுத்தவும், உளவுத் துறை சேகரிப்பை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் இது நவீன சகாப்தத்தில், போர்க்களத்தை மாற்றுவதாக அமைகிறது.

APOLLO STUDY CENTRE

# பொருளாதாரம்

- **2024ஆம் நிதி ஆண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி கணிப்பு 7.3 விழுக்காடு: தேசிய புள்ளியியல் அலுவலக தரவு**

✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் (National Statistical Office) 2023-24 நிதியாண்டில் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் வலுவான 7.3 விழுக்காடு வளர்ச்சியைக் கணித்து, அதன் முன்கூட்டிய மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.




✓ இது முந்தைய நிதியாண்டில் பதிவான 7.2 விழுக்காடு வளர்ச்சியை மிஞ்சும். குறிப்பிடத்தக்க வகையில், கட்டுமானத் துறை 10.7 விழுக்காடு என்ற இரட்டை இலக்க வளர்ச்சியுடன் முன்னணியில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✓ 2023 நிதியாண்டுக்கான தற்காலிக மதிப்பீடான 160.06 இலட்சம் கோடியுடன் ஒப்பிடும்போது, 2024 நிதியாண்டில் நிலையான விலையில் உண்மையான ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்ச 171.79 இலட்சம் கோடியை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- **உலகப் பொருளாதாரநிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை 2025**

✓ ஐக்கிய நாடுகள் சபையின் உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கையின்படி, இந்தியப் பொருளாதாரம் 2025 ஆம் ஆண்டில் 6.76 விழுக்காடாக வளர்ச்சியடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.




✓ இந்த வளர்ச்சியானது வலுவான தனியார் நுகர்வு மற்றும் முதலீட்டால் ஆதரிக்கப்படுகிறது.

- ✓ இந்த அறிக்கையானது அதன் முந்தைய வளர்ச்சி முன்னறிவிப்பைப் பராமரிக்கிறது. இது இந்தியாவின் பொருளாதார நெகிழ்வுத் தன்மை மீதான நம்பிக்கையை பிரதிபலிக்கிறது.
- ✓ உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதில் பொதுத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.
- ✓ இந்தத் திட்டங்கள் இயல் மற்றும் டிஜிட்டல் இணைப்பை மேம்படுத்துவதோடு, சுகாதாரம் மற்றும் நீர் வழங்கல் உள்ளிட்ட சமூக உள்கட்டமைப்பை மேம்படுத்துகின்றன.

➢ **உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் புதுப்பிப்பு**

- ✓ எதிர்வரும் 2025-26 மற்றும் 2026-27 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி 6.5 விழுக்காடு இருக்கும் என்றும் சர்வதேச நாணய நிதியம் கருதுகிறது.




- ✓ ஜனவரி 17, 2025 அன்று வெளியிடப்பட்ட அதன் உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தில், அக்டோபர் மாத முன்னறிவிப்பைப் போலவே வளர்ச்சி விகிதம் இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிடுகிறது.
- ✓ உலகின் மிகப்பெரிய பொருளாதாரங்களில், இந்தியா தொடர்ந்து உயர்ந்த விகிதத்தில் வளர்ந்து வருகிறது.
- ✓ சர்வதேச நாணய நிதிய கணிப்புகளின்படி, உலகளாவிய வளர்ச்சி 2025 மற்றும் 2026 இல் 3.3 விழுக்காடாக இருக்கும்.
- ✓ இது 3.7 விழுக்காடு வரலாற்று சராசரியை விடக் குறைவு ஆகும்.

# நியமனங்கள்

- **இஸ்ரோவின் தலைவராகவும், விண்வெளித் துறைச் செயலராகவும் வி. நாராயணன் பொறுப்பேற்றுக் கொண்டார்**




- ✓ ராக்கெட் மற்றும் விண்கல உந்துதல் பணியில் சுமார் நாற்பது ஆண்டு கால அனுபவமுள்ள புகழ்பெற்ற விஞ்ஞானியான டாக்டர். வி. நாராயணன், விண்வெளித் துறையின் புதிய செயலாளராகவும், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ ஜனவரி 14, 2025 முதல் அவர் எஸ். சோமநாத்துக்குப் பிறகு பதவியேற்றார்.
- ✓ ஜிஎஸ்எல்வி எம்கே 3 மற்றும் சந்திரயான்-3 உந்துவிசை அமைப்புகளின் வளர்ச்சி உட்படப பல முக்கிய இஸ்ரோ பணிகளில் அவரது தலைமை முக்கிய பங்கு வகித்துள்ளது.

- **நீதியரசர் கிருஷ்ணன் வினோத் சந்திரன், உச்ச நீதிமன்றத்தில் இணைந்து கொண்டார்**
- ✓ இந்திய உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக, நீதியரசர் கிருஷ்ணன் வினோத் சந்திரன், ஜனவரி 16, 2025 அன்று பதவியேற்றுக் கொண்டார்.




- ✓ இந்திய தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- ✓ இந்த நியமனத்தின்மூலம் உச்ச நீதிமன்றத்தின் நீதியரசர்களின் பலம் 33 ஆக உயர்ந்துள்ளது. இது அதன் முழு அனுமதிக்கப்பட்ட திறனில் ஒன்று குறைவு ஆகும்.

➢ **அமெரிக்காவின் 47வது ஜனாதிபதி**

✓ அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் பதவியேற்றார்.




✓ வாஷிங்டன் டி.சி-யில் அமெரிக்க தலைமை நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் முன்னிலையில் ஜனாதிபதி பதவிப் பிரமானம் ஏற்றுக் கொண்டார்.

✓ அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸும் பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்டார். பதவியேற்பு விழாவில் இந்தியாவின் பிரதிநிதியாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

✓ டெஸ்லாவின் எலோன் மஸ்க், மெட்டாவின் மார்க் ஜுக்கர்பெர்க், ஆப்பிளின் டிம் குக் மற்றும் ஓபன்ஏஐ-யின் சாம் ஆல்ட்மேன் ஆகியோரும் பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர்.

APOLLO STUDY CENTRE

# விருதுகள்

➢ **மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருதுக்கு தேர்வு பெற்றவர்கள் விவரம் வெளியிடப்பட்டது**




- ✓ விளையாட்டுத் துறையில் சிறப்பான பங்களிப்பை வழங்கியவர்களைக் கௌரவிக்கும் வகையில், 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மதிக்க மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருது பெறுபவர்களை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- ✓ மனு பார்க்கர் (துப்பாக்கி சுடுதல்), ஹர்மன் பிரீத் சிங் (ஹாக்கி), பிரவீன் குமார் (பாரா தடகளம்), டி. குகேஷ் (செஸ்).

➢ **மாநில அரசு விருதுகள் அறிவிப்பு**

- ✓ 2024ஆம் ஆண்டுக்கான அண்ணா விருது, மகாகவி பாரதியார் விருது, தந்தை பெரியார் விருது, அண்ணல் அம்பேத்கார் விருது, முத்தமிழ் அறிஞர் கலைஞர் விருது, 2025ஆம் ஆண்டுக்கான அய்யன் திருவள்ளுவர் விருது ஆகியவற்றை தமிழக அரசு அறிவித்துள்ளது.
- ✓ ஜனவரி 15 ஆம் தேதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இந்த விருதுகளை வழங்கினார்.

அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

- ✓ அய்யன் திருவள்ளுவர் விருதுக்கு எம். படிக்கராமு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ அண்ணா விருதுக்கு தி.மு.க தலைவர் எல். கணேசன் தேர்வு
- ✓ மகாகவி பாரதியார் விருதுக்கு கவிஞர் கபிலன் மற்றும் பொன் பாரதிதாசன் விருதுக்கு செல்வகணபதி தேர்வு.
- ✓ மருத்துவ நிபுணர் ஜி.ஆர் ரவீந்திரநாத்துக்கு தமிழ்த்தென்றல் திரு.வி.க விருது
- ✓ கே.ஏ.பி. விஸ்வநாதன் விருதுக்கு வெ.மு. பொதியவெற்பன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ தந்தை பெரியார் விருதை பத்திரிகையாளர் விடுதலை ராஜேந்திரன் பெறுகிறார்.
- ✓ அண்ணல் அம்பேத்கார் விருது வி.சி.க. எம்.பி ரவிக்குமாருக்கு வழங்கப்படுகிறது.
- ✓ கலைஞர் விருதை முத்துவாசி பெறுவார்.

➢ **கேட்ஸ் - கேம்பிரிட்ஜ் தாக்கம் பரிசு 2025**

- ✓ ராமன் ஆராய்ச்சி நிறுவன ஆசிரியர்களுக்கு கேட்ஸ்-கேம்பிரிட்ஜ் இம்பாக்ட் பரிசு 2025 வழங்கப்பட்டது.




- ✓ இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒளி மற்றும் பொருள் இயற்பியல் துறை பேராசிரியர் உர்பசி சின்ஹா, இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜில் உள்ள பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையால் வழங்கப்படும் கேட்ஸ்-கேம்பிரிட்ஜ் இம்பாக்ட் பரிசு 2025 வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

**➢ பத்ம பூஷன்**

- ✓ திரு நல்லி குப்புசுவாமி செட்டி – வர்த்தகம் மற்றம் தொழில், தமிழ்நாடு
- ✓ திரு. எஸ். அஜித்குமார் - கலை, தமிழ்நாடு
- ✓ திருமதி ஷோபனா சந்திரகுமார் - கலை, தமிழ்நாடு




**➢ பத்ம ஸ்ரீ**

- ✓ திரு. குருவாயூர் தொரை – கலை, தமிழ்நாடு
- ✓ திரு. கே. தாமோதரன் மற்றும் மற்றவர்கள் - சமையல், தமிழ்நாடு
- ✓ திரு. லக்ஷ்மிபதி ராமசுப்பையர் - இலக்கியம் மற்றும் கல்வி - இதழியல், தமிழ்நாடு
- ✓ திரு. எம்.டி ஸ்ரீனிவாஸ்- அறிவியல் மற்றும் பொறியியல், தமிழ்நாடு
- ✓ திரு புரிசை கண்ணப்ப சம்பந்தன் - கலை, தமிழ்நாடு
- ✓ திரு.ஆர் அஸ்வின் - விளையாட்டு, தமிழ்நாடு
- ✓ திரு.ஆர். ஜி. சந்திரமோகன் - வர்த்தகம் மற்றும் தொழில், தமிழ்நாடு
- ✓ திரு. ராதாகிருஷ்ணன் தேவசேனாபதி – கலை, தமிழ்நாடு
- ✓ திரு. சீனி விஸ்வநாதன் - இலக்கியம் மற்றும் கல்வி, தமிழ்நாடு
- ✓ திரு. ஸ்ரீவேலுஆசான் - கலை, தமிழ்நாடு

➢ **பிசிசிஐ வாழ்நாள் சாதனையாளர் விருது**

✓ சச்சின் டெண்டுல்கருக்கு பிசிசிஐ-யின் சி.கே நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது ஆண்டு நிறைவு விழாவின்போது வழங்கப்படும்.




✓ 51 வயதான இந்த கிரிக்கெட் ஜாம்பவான், 664 சர்வதேச போட்டிகளில் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அதிக ரன்களைக் குவித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

✓ அவர் பெற்ற விருதுகள்: பாரத ரத்னா, பத்ம விபூஷன், பத்ம ஶ்ரீ, மகாராஷ்டிரா பூஷன், கேல்ரத்னா வருது, அர்ஜுனா விருது ஆகியவை.

# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **சுயசரிதை : ‘ஸ்டம்ப்ட்: இருபத்தி இரண்டு முழங்களுக்குப் பின்னாலும் அப்பாலும் வாழ்க்கை’ (Stumped: Life Behind and Beyond the Twenty-Two Yards)**




- ✓ முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரும் விக்கெட் கீப்பருமான சையத் முஜ்தபா ஹுசைன் கிர்மானி, கர்நாடகாவின் பெங்களூரு சின்னசாமி விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற ஒரு பிரம்மாண்ட நிகழ்வில் ‘ஸ்டம்ப்ட்: இருபத்தி இரண்டு முழங்களுக்குப் பின்னாலும் அப்பாலும் வாழ்க்கை’ என்ற தலைப்பில் தனது சுயசரிதையை வெளியிட்டார்.
- ✓ கிர்மானியின் 75வது பிறந்த நாளை ஒட்டி இந்தப் புத்தகம் வெளியானது. புத்தகத்தை பென்குயின் ப்ளே நிறுவனம் வெளியிட்டுள்ளது..

- மனிஷா பாண்டேவின் புத்தகம் நடுத்தர வர்க்க இந்தியாவை மாற்றத்தின் உந்துதலாக வெளிப்படுத்துகிறது
- பத்திரிகையாளர் மனிஷா பாண்டே, தனது ‘நடுத்தர வர்க்க இந்தியா: 21ஆம் நூற்றாண்டில் மாற்றத்திற்கான இயக்கம்’ (Middle Class India: Driving Change in the 21st Century) என்ற புத்தகத்தை வெளியிட்டார்.




- ✓ இது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது

- ✓ 1757 முதல் 1947 வரையிலான காலகட்டத்தை மையமாகக் கொண்டு சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவின் நடுத்தர வர்க்கத்தைப் பற்றியது பகுதி 1 ஆகும்.
- ✓ 1947இல் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் பிடியிலிருந்து இந்தியா தன்னை விடுத்தது முதல் 1991ல் பொருளாதார தாராளமயமாக்கலுக்கு இடைப்பட்ட காலக்கெடுவைப் பற்றியது இரண்டாம் பகுதி ஆகும்.
- ✓ மூன்றாவது பகுதி, தாராளமயமாக்கலுக்குப் பிறகு 1991 முதல் இன்று வரையிலான சூழ்நிலையைப் பற்றியது ஆகும்.

➢ **பாராளுமன்றத்தின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய புத்தகம்**

- ✓ கே.எஸ். சௌஹான் எழுதிய 'பாராளுமன்றம்: அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் சிறப்புரிமைகள், ஒரு ஒப்பீட்டு அரசியலமைப்பு முன்னோக்கு' (Parliament: Powers, Functions & Privileges; a Comparative Constitutional Perspective) என்ற புத்தகத்தை துணை குடியரசுத் தலைவர் வெளியிட்டார்.



- ✓ அரசின் பொறுப்புக் கூறலில் பாராளுமன்றத்தின் பங்கு மற்றும் உரையாடல், விவாதம் மற்றும் சிறப்புரிமைகளின் பொறுப்பான பயன்பாடு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை இந்தப் புத்தகம் வலியுறுத்துகிறது.
- ✓ தன்கர், ஆசிரியரின் அர்ப்பணிப்பைப் பாராட்டியதுடன், கொள்கை வகுப்பாளர்களுக்கும் சட்ட மாணவர்களுக்கும் இந்தப் புத்தகம் மதிப்புமிக்க ஆதாரம் என்று கூறினார்.

➢ **காசாவிற்குப் பின் உலகம்**

- ✓ பங்கஜ் மிஸ்ரா எழுதிய 'காசாவிற்குப் பின் உலகம்' (The World After Gaza) என்ற புத்தகம் பாலஸ்தீனியப் பகுதியில் நடைபெற்று வரும் போர் பற்றிய ஒரு ஆய்வுக் கட்டுரையாகும்.



- ✓ இந்தப் புத்தகத்தை இந்தியாவில் உள்ள ஜக்கர்நாட் புக்ஸ் என்ற பதிப்பகம் வெளியிட்டுள்ளது.
- ✓ மனித உரிமைகள் பற்றிய சிந்தனையை அழித்ததாகக் கண்டிக்கப்பட்ட இந்தப் போரின் நுணுக்கங்களைப் புரிந்துகொள்வதையும், உலகில் ஒழுக்கச் சீரழிவின் கீழ்நோக்கிய சூழலுக்கு வழியை ஏற்படுத்திக் கொடுத்ததைப் புரிந்து கொள்வதையும் இந்தப் புத்தகம் நேரத்தில் சரியான நேரத்தில் படிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தது.
- ✓ மிஸ்ரா ஒரு விருது பெற்ற கட்டுரையாளர் ஆவார். அவர் ஒன்பது புனைகதை மற்றும் புனைகதை அல்லாத புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

## ➢ **இந்தியா எப்படி ஜி20 உச்சி மாநாட்டை நடத்தியது**

- ✓ அமிதாப்காந்த் எழுதிய புத்தகம் ‘இந்தியா எப்படி ஜி20 உச்சி மாநாட்டை நடத்தியது’ (How India scaled Mt. G20) ஆகும்.




- ✓ அமிதாப் காந்த் எழுதிய ‘இந்தியா எப்படி ஜி20 உச்சி மாநாட்டை நடத்தியது’ என்ற புத்தகம், ஜி20 தலைவர் பதவியை இணையற்ற வெற்றியாக மாற்றியதில் நாட்டின் உறுதியையும் கூட்டு முயற்சியையும் சித்தரிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.
- ✓ செப்டம்பர் 2023இல், புது தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாடு இந்த தசாப்தத்தின் மிகப்பெரிய உலகளாவிய மாநாடுகளில் ஒன்றாகும்.
- ✓ இந்த மாநாட்டின்போது ஒருமித்த கருத்தின் அடிப்படையில் எட்டப்பட்ட கூட்டுப் பிரகடனம் இந்த நிகழ்வின் பெரும் வெற்றியாகும்.

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்

➢ **சீனாவில் மனித மெட்டாப்நியூமோ வைரஸ் (Human Metapneumovirus) நோய்க்கிளர்ச்சி**

✓ சீனாவில் தற்போது மனித மெட்டாப் நியூமோவைரஸ் நோய்த்தாக்கம் அதிகரித்து வருகிறது. இது கோவிட் 19 பெருந்தொற்று நோயை நினைவூட்டும் சாத்தியமான சுகாதார நெருக்கடி பற்றிய கவலைகளுக்கு வழிவகுக்கிறது.




✓ HMPV, இன்ஃப்ளுயன்ஸா,ஏ, மைக்கோபிளாஸ்மா நிமோனியா மற்றும் கோவிட் -19 உள்ளிட்ட பல வைரஸ்கள் இருக்கக்கூடும் என்ற பரிந்துரைகளால் மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன என்று அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. அவசரகால நிலை குறித்த சில கூற்றுகள் இருந்தபோதிலும், சீன அதிகாரிகளிடமிருந்து அதிகாரப்பூர்வ உறுதிப்படுத்தல் எதுவும் இல்லை.

➢ **தமிழகத்தில ஸ்க்ரப் டைஃபஸ் (Scrub Typhus) நோய்க்கிளர்ச்சி பரவி வருகிறது.**

✓ ஸ்க்ரப் டைஃபஸ் என்ற பாக்டீரியா தொற்று தற்போது தமிழகத்தில் பரவி வருகிறது. சென்னை, காஞ்சிபுரம், திருப்பத்தூர், திருவள்ளுர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மற்றும் வேலூர் போன்ற மாவட்டங்களில் ஏராளமான நேர்வுகள் பதிவாகியுள்ளன.




✓ தொற்றுநோயைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பொது சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

✓ இந்த ஸ்க்ரப் டைபஸ் ஓரியண்டியாட்சுட்சுகமுஷி (Orientiatsutsugamushi) என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிறது.

✓ இந்தப் பாக்டீரியம் பொதுவாக சிகர்ஸ் என குறிப்பிடப்படும் பாதிக்கப்பட்ட லார்வாப் பூச்சிகள் கடித்தால் பரவுகிறது.

➢ **இலக்கு புற்றுநோய்ககு ஹைட்ரோஜெல் ஊசிமருந்து மூலம் சிகிச்சை**

- ✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம், கௌஹாத்தி மற்றும் கொல்கத்தாவின் போஸ் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் உள்ளூர்மயமாக்கப்பட்ட புற்றுநோய் சிகிச்சைக்காக மேம்பட்ட ஹைட்ரோஜெல் ஊசி மருந்தை உருவாக்கியுள்ளனர்.




- ✓ இந்திய தொழில்நுட்பக் கழகம், கௌஹாத்தி வெளியிட்ட அறிக்கையில், இந்த ஹைட்ரோஜெல், புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கான நிலையான சேமிப்பகமாகச் செயல்பட்டு, பாதிப்பிலிருந்து ஆரோக்கியமான செல்களைக் காப்பாற்றும்போது, கட்டுப்படுத்தப்பட்ட முறையில் வெளியிடப்படுகிறது.
- ✓ மார்பக புற்றுநோய் சிகிச்சையில் பரட்சிகரமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் இந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள், ராயல் சொசைட்டி ஆப் கெமிஸ்ட்ரியின் இதழான மெட்டீரியல்ஸ் ஹாரிசன்சில் வெளியிடப்பட்டுள்ளன.

➢ **இஸ்ரோவின் POEM-4 தொகுதியின் 10 பேலோடுகள் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டன.**




- ✓ PSLV-C60/SpaDeX மிஷனின் போயம்-4 மாட்யூலில் அரசு சாரா நிறுவனங்களிலிருந்து 10 ஹோஸ்ட் செய்யப்பட்ட பேலோடுகளை வெற்றிகரமாக நிறுவுவதற்கும் செயல்படுத்துவதற்கும் இது உதவியது என்று இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (Indian National Space Promotion and Authorization Centre) செவ்வாயன்று கூறியது.
- ✓ இந்தப் பணியை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) திங்கட்கிழமை ஏவியது.

- ✓ இன்று தொடங்கப்பட்ட பணியானது, 55 டிகிரி சாய்வுடன் 350 கிமீ உயரத்தில் சுற்றுப் பாதையில் அறிவியல் சோதனைகளை மேற்கொண்டது. இது பிஎஸ்எல்வி ஆர்பிட்டல் எக்ஸ்பெரிமெண்டல் மாட்யூல் (PSLV Orbital Experimental Module - POEM-4) என்று ஸ்பெண்ட் பிஎஸ்4 நிலையைப் பயன்படுத்தியது.

- **PSLV-C58'S POEM3 தளத்தில் எரிபொருள் கலத்தை இஸ்ரோ வெற்றிகரமாக சோதித்தது.**
- ✓ ஜனவரி 1, 2024 அன்று, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், அதன் சுற்றுப்பாதைத் தளமான போயம்- (POEM3) இல் 100 வாட் கிளாஸ் பாலிமர் எலக்ட்ரோலைட் சவ்வு எரிபொருள் செல் அடிப்படையிலான பவர் அமைப்பை வெற்றிகரமாக சோதித்து ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது.




- ✓ இந்தக் குறிப்பிடத்தக்க சாதனையானது பிஎஸ்எல்வி-சி58 பயணத்தில் நடந்தது. இது எதிர்கால விண்வெளி பயணங்களுக்கான எரிபொருள் செல் தொழில்நுட்பத்தை மதிப்பிடுவதில் ஒரு முக்கியமான படியாகும்.
- ✓ விண்வெளியின் சவாலான சூழலில் பாலிமர் எலக்ட்ரோலைட் சவ்வு எரிபொருள் செல்களின் செயல்பாட்டை மதிப்பிடுவதே இந்தச் சோதனையின் முதன்மை நோக்கமாகும்.

- **ஐஐடி, சென்னை ஆராய்ச்சியாளர்கள் தாவர செல்களைப் பயன்படுத்தி புற்றுநோய்க்கான மருந்து தயாரிக்கும் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்**
- ✓ புகழ்பெற்ற இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களான சென்னை மற்றும் மண்டியின் ஆராய்ச்சியாளர்கள், புற்றுநோய் எதிர்ப்பு மருந்தான கேம்ப்டோதெசின் (camptothecin) உற்பத்தியை அதிகரிப்பதற்காக, தாவர செல்களை வளர்சிதை மாற்றத்தில் வெற்றிகரமாக வடிவமைத்துள்ளனர்.



- ✓ அழிந்துவரும் தாவரமான Nathapodytesnimmoniana-இன் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதால், இலிருந்து பாரம்பரியமாக பிரித்தெடுக்கப்படும் CPT-யின் நிலை கவலைக்குரியதாக உள்ளது.
- ✓ இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் இந்த இனத்தை சிவப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது.

## ➢ ஐஐடி, சென்னை ஆசியாவின் மிகப்பெரிய அலைப்படுகையுடன் சாதனை படைத்துள்ளது.

- ✓ ஐஐடி, சென்னை, ஆசியாவின் மிகப்பெரிய ஆழமற்ற அலைப்படுகையை, தையூரில் உள்ள அதன் டிஸ்கவரி வளாகத்தில் வெற்றிகரமாக இயக்கி வைத்தது.



- ✓ இந்த ஆராய்ச்சி வசதியானது, சிக்கலான கடலோர பொறியியல் சவால்களை எதிர்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், கடல் அறிவியல் மற்றும் பொறியியலில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ உள்நாட்டு தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்ட ஆழமற்ற அலைப் படுகையானது, வெளிநாட்டு தொழில்நுட்பத்தை நம்பாமல், துறைமுகம் மற்றும் நீர்வழி ஆராய்ச்சியில் நாட்டின் திறன்களை மேம்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

## ➢ 2024இல் முதல் முறையாக பூமி 1.5°C எல்லையைத் தாண்டுகிறது




- ✓ காலநிலை மாற்றத்திற்கான ஒரு முக்கிய நிகழ்வில், கோப்பர்நிகஸ் காலநிலை மாற்ற சேவை அறிக்கையின்படி, 2024 ஆண்டின் சராசரி உலக வெப்பநிலையானது, தொழில்துறைக்கு முந்தைய நிலைகளை விட முக்கியமான 1.5°C வரம்பைத் தாண்டிய வரலாற்றின் முதல் ஆண்டாக விளங்குகிறது.
- ✓ இந்த மீறலானது புவி வெப்பமடைதலுக்கான ஆபத்தான பாதையைக் குறிக்கிறது. இது மனிதகுலத்தைத் திரும்பப் பெற முடியாத நிலைக்கு நெருக்கமாகக் கொண்டு செல்கிறது.

- ✓ கடுமையான உமிழ்வு வெட்டுக்கள் இல்லாமல் இந்தப் போக்கு தொடர்ந்தால், 2050ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் வரம்பைத் தாண்டும், சுற்றுசசூழல் அமைப்புகள், பொருளாதாரங்கள் மற்றும் மனித வாழ்வாதாரங்களுக்கு பேரழிவைத் தரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்று காலநிலை வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

## ➢ 10,000 மனித மரபணுக்களின் தொகுப்பை (Human Genomes) இந்தியா வெளியிடுகிறது

- ✓ இந்தியா, 83 மக்கள் தொகை குழுக்களைக் குறிக்கும் 10,000 மனித மரபணுக்களின் ஒரு வருட காலத் தொகுப்பை நிறைவு செய்து கிடைக்கச் செய்துள்ளது. இது நாட்டின் 4,600 மக்கள் தொகை குழுக்களில் 2 விழுக்காடு ஆகும்.




- ✓ இந்தத் தொகுப்பு நோய் மற்றும் மருந்து சிகிச்சை பற்றிய எதிர்கால ஆய்வுகளின் மாதிரியாக செயல்படும்.
- ✓ 'ஜீனோம் இந்தியா' என்று அறியப்படும் இந்தத் தரவுத் தளம், இப்போது உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுக்காக கிடைக்கும். இது ஹரியானாவின் ஃபரிதாபாத்தில் உள்ள இந்திய உயிரியல் தரவு மையத்தில் (Indian Biological Data Centre) வைக்கப்பட்டுள்ளது.

## ➢ விண்வெளியில் படபடக்கும் இலைகள்: இஸ்ரோவின் சோதனையானது மைல்கல்லை எட்டியுள்ளது

- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் சுற்றுப் பாதைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சமீபத்தில் முளைத்த தட்டைப் பயிறு விதைகளின் ஒரு தொகுதியின் முதல் இலைகள் துளிர்த்துள்ளன.



✓ ‘இலைகள் வெளிவந்தன. PSLV-C60 POEM-4 கலத்தில் உள்ள VSSC ன் CROPS (Compact Research Module for Orbital Plant Studies) தட்டைப் பயிறு விதைகள், விண்வெளியில் தங்கள் முதல் இலைகளை வெளிப்படுத்தும்போது, ஒரு மைல் கல் எட்டப்படுகிறது’ என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

✓ இரண்டு நாட்களுக்கு முன்பாக தட்டைப்பயிறு விதைகள் விணவெளியில் வெற்றிகரமாக முளைத்ததை நினைவுகூரலாம்.

➢ **இஸ்ரோவின் ஸ்பேடெக்ஸ் மிஷன் (SpaDeX Mission) செயற்கைக்கோளை இணைக்கும் மைல்கல்லை எட்டியுள்ளது**

✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் அதன் ஸ்பேடெக்ஸ் மிஷன் பணியின் மூலம் செயற்கைக் கோளை இணைக்கும் தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க சாதனையை நிகழ்த்தியுள்ளது.




✓ இந்தப் பணியானது SDX01 (பின்தொடர்வது) மற்றும் SDX02 (இலக்கு) ஆகிய இரண்டு செயற்கைக்கோள்களை உள்ளடக்கியதாகும். இது விண்கலம் சந்திப்பு, இணைப்பு மற்றும் பிரிதல் ஆகிய தொழில்நுட்பங்களை சோதித்து நிரூபிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ இந்த சிக்கலான பணியை நிறைவேற்றிய அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவிற்கு அடுத்ததாக நான்காவது நாடாக இந்தியா மாறும் பாதையில் இந்த மைல்கல் இந்தியாவை நிலைநிறுத்துகிறது.

➢ **ஸ்ரீஹரிகோட்டாவில் இஸ்ரோவின் புதிய ஏவுதளம் வரவுள்ளது**

✓ பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இஸ்ரோவின் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் மூன்றாவது ஏவுதளத்தை நிறுவுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.



- ✓ 3,985 கோடி ரூபாய் மதிப்பிலான இந்தத் திட்டம், இந்தியாவின் விண்வெளிப் போக்குவரத்து திறன்களை மேம்படுத்துவதில், குறிப்பாக அடுத்த தலைமுறை ஏவுகணை வாகனங்களுக்கு (Next Generation Launch Vehicles), ஒரு முக்கியமான படியாகும்.
- ✓ இந்த ஏவுதளம் எதிர்கால மனித விண்வெளிப் பயணங்கள் மற்றும் 2040க்குள் இந்திய குழுவினர் சந்திரனில் தரையிறக்கம் உட்பட விண்வெளி ஆய்வுக்கான இந்தியாவின் இலட்சிய திட்டங்களை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ➢ SCOT மிஷன்

- ✓ மிஷன் ஸ்காட்டின் (SCOT) வெற்றிக்காக இந்திய விண்வெளி புத்தொழில் நிறுவனமான திகந்தாராவை பிரதமர் சமீபத்தில் பாராட்டினார்.




- ✓ SCOT (Space Camera for Object Tracking) என்பது விண்வெளி கண்காணிப்புக்கு அர்ப்பணிக்கப்பட்ட திகந்தராவின் (இந்திய விண்வெளி புத்தொழில் நிறுவனம்) தொடக்கப் பணியாகும்.
- ✓ இது உலகின் முதல் வணிக விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு (Space Situational Awareness) செயற்கைக்கோள்களில் ஒன்றாகும்.
- ✓ இது ஸ்பேஸ் எக்ஸின் டிரான்ஸ்போர்ட்டர்-12 மிஷனில் ஏவப்பட்டது. ஸ்காட் ஆனது ரெசிடெண்ட் ஸ்பேஸ் ஆப்ஜெக்ட்களை (Resident Space Objects) கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டது.

## ➢ ஸ்டார்கேட் செயற்கை நுண்ணறிவு திட்டம் (Stargate AI Project)

- ✓ அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வெள்ளை மாளிகையில் அறிவித்த ஸ்டார்கேட் செயற்கை நுண்ணறிவு திட்டம், செயற்கை நுண்ணறிவின் பரிணாம வளர்ச்சியில் ஒரு மகத்தான படியைக் குறிக்கிறது.



- ✓ வரலாற்றில் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு உள்கட்டமைப்பு முன் முயற்சியாகக் கூறப்படும் இந்த இலட்சியத் திட்டம், உலகின் மிகப்பெரிய தொழில்நுட்பம் மற்றும் வணிகங்கள் சிலவற்றின் ஆதரவைப் பெற்றுள்ளது.
- ✓ அடுத்த நான்கு ஆண்டுகளில் 500 பில்லியல் டாலர் முதலீட்டில் செயல்படுத்தப்பட உள்ள, ஸ்டார்கேட் செயற்கை நுண்ணறிவுத் திட்டம் உலகத்தரம் வாய்ந்த செயற்கை நுண்ணறிவு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதையும், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும், அமெரிக்க பொருளாதாரத்தை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ➢ விகாஸ் எஞ்சினின் ரீஸ்டார்ட் திறனை இஸ்ரோ வெற்றிகரமாக நிரூபித்துள்ளது

- ✓ சமீபத்தில், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், அதன் விகாஸ் திரவ இயந்திரத்தைக் கொண்டு மைல்கற்களை எட்டியுள்ளது.




- ✓ எஞ்சினின் ரீஸ்டார்ட் திறன்களின் வெற்றிகரமான செயல்விளக்கமானது, ஏவுகணை வாகனங்களின் மறுபயன்பாட்டை மேம்படுத்துவதற்கான ஒரு முக்கியமான படியைக் குறிக்கிறது.
- ✓ எல்விஎம்3 ஏவுகணை வாகனத்தின் எல் 110 மைய திரவ நிலையை வணிக நடவடிக்கைகளுக்காக இஸ்ரோ அனுமதித்துள்ளது.
- ✓ ப்ளூபேர்ட் பிளாக்-2 செயற்கைக் கோளை ஏவுவதற்கான வணிக ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக இந்தப் பணி உள்ளது. இது உலகளாவிய விண்வெளி வர்த்தகத்தில் இஸ்ரோவின் பங்கை மேலும் உறுதி செய்கிறது.

## ➢ டீப்சீக் ஏஐ, சாட்ஜிபிடிஐ விஞ்சுகிறது

- ✓ சீனாவின் செயற்கை நுண்ணறிவு புத்தொழில் நிறுவனமான டீப்சீக் ஆனது, ஓபன் ஏஐ-ன் சாட் ஜிபிடி-ஐ விஞ்சி, ஆப்பிளின் ஆப் ஸ்டோரில் அமெரிக்காவில் அதிகம் பதிவிறக்கம் செய்யப்பட்ட இலவச செயலியாக தலைப்புச் செய்திகளில் இடம் பிடித்துள்ளது.



- ✓ 2023இல் தோற்றுவிக்கப்பட்ட டீப்சீக் ஆனது, அதன் மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு மாதிரிகள், குறிப்பாக ஓபன் ஏஐ-ன் தொழில்நுட்பத்திற்குப் போட்டியாக இருக்கும் ஆர்1 என்ற பகுத்தறிவு மாதிரி மூலம் விரைவாக முக்கியத்துவம் பெற்றுள்ளது.
- ✓ இந்த வளர்ச்சியானது, ஒரு தசாப்தத்திற்குள் 1 டிரில்லியன் டாலர் வருவாயை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ள ஜெனரேட்டிவ் ஏஐ சந்தையின் போட்டித் தன்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- ✓ இருப்பினும், இணைய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் ஒழுங்குமுறை ஆய்வு போன்ற சவால்களும் பெரிய அளவில் இருக்கத்தான் செய்கின்றன.

- ➢ **ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 100வது பயணத்தைக் குறிக்கும் என்விஎஸ்-02ஐ இஸ்ரோ அறிமுகப்படுத்தியது**
- ✓ இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாகிய இஸ்ரோ, ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து புதிய தலைமுறை செயற்கைக்கோள் என்விஎஸ்-02-ஐ வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது




- ✓ இன்று காலை 6.23 மணிக்கு, என்விஎஸ்-02ஐ சுமந்து செல்லும் ஜியோசின்க்ரோனஸ் செயற்கைக்கோள் ஏவுகணை வாகனம் புறப்பட்டுச் சென்றது.
- ✓ ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி மையத்திலிருந்து இஸ்ரோவின் 100வது ஏவுதலை நினைவுகூரும் வரையில் இந்த ஏவுதல் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.
- ✓ இந்த என்விஎஸ்-02 செயற்கைக்கோள், இஸ்ரோவில் உள்ள பிற செயற்கைக்கோள் பணி மையங்களின் ஆதரவுடன், யுஆர் செயற்கைக்கோள் மையத்தில் (U R Satellite Centre) வடிவமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டது.

- ➢ **ஆக்ஸியம்-4ஐ சர்வதேச விண்வெளி நிலையத்திற்குக் கொண்டு செல்லும் இந்தியாவின் முதல் விண்வெளி வீரர்**
- ✓ இந்தியாவின் விண்வெளி ஆய்வு ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. இதன்மூலம், குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு விண்வெளிப் பயணத்தை மேற்கொண்ட முதல் இந்திய விண்வெளி வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.




- ✓ 2025ஆம் ஆண்டு வசந்த காலத்தில் ஏவப்பட உள்ள தனியார் விண்வெளிப் பயணமான ஆக்சியம் மிஷன் 4க்கு அவர் பைலட்டாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ✓ ராகேஷ் ஷர்மாவின் முக்கியத்துவம் வாய்ந்த விண்வெளிப் பயணத்துடன் 40 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய பயணத்தைத் தொடர்ந்து, இந்தியாவின் விண்வெளி வரலாற்றில் இது ஒரு குறிப்பிடத்தக்க தருணத்தைக் குறிக்கிறது.

- ➢ **அலிபாபாவால் வெளியிடப்பட்ட டீப்சீக்-எ3-ஐ, ஏஐ மாதிரி விஞ்சுவதாகக் கூறப்படுகிறது.**
- ✓ ஜனவரி 29 அன்று, சீன தொழிலநுட்ப நிறுவனமான அலிபாபாவால் Qwen 2.5 ஏஐ மாதிரியின் புதிய பதிப்பு வெளியிடப்பட்டது. இது மிகவும் பாராட்டப்பட்ட டீப்சீக்-வி3-ஐ விஞ்சியதாகக் கூறப்படுகிறது.




- ✓ லூனார் புத்தாண்டின் முதல் நாளில் Qwen 2.5-Max வெளியிடப்பட்டது, பெரும்பாலான சீனர்கள் ஓய்வில் இருக்கும் நிலையில், டீப்சீக்-இன் விண்கல் உயர்வால் உருவாக்கப்பட்ட அழுத்தத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.
- ✓ Qwen 2.5-Max ஆனது, GPT-4o, டீப்சீக்-V3, மற்றும் Llama-3.1-405B-ஐ விஞ்சுவதாக உள்ளது என்று அலிபாபாவின் கிளவுட் யூனிட் வீசேட்டில் அறிவித்தது.

# விளையாட்டுகள்

➢ **கோகோ உலகக்கோப்பை 2025இன் கோப்பைகள் மற்றும் சின்னங்கள்**

✓ இந்த விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் பதிப்பை புதுதில்லியில் இந்தியா நடத்த உள்ளது.




✓ இந்திய கோகோ கூட்டமைப்பு (The Kho Kho Federation of India) முதல் கோகோ உலகக் கோப்பைப் போட்டிக்கான கோப்பைகளை வெளியிட்டது.

✓ இந்தப் போட்டியில் ஆறு கண்டங்களில் உள்ள 24 நாடுகளைச் சேர்ந்த 21 ஆண்கள் மற்றும் 20 பெண்கள் அணிகள் பங்கேற்கும்.

✓ இந்த உலகக்கோப்பைப் போட்டியில் இரண்டு கோப்பைகள் இடம் பெறும் - ஆண்கள் சாம்பியன்ஷிப்பிற்கான நீல கோப்பை மற்றும் பெண்கள் போட்டிக்கான பச்சை கோப்பை.

✓ இந்திய கோகோ கூட்டமைப்பானது, ‘தேஜாஸ்’ மற்றும் ‘தாரா’ என்ற இரட்டை மான்குட்டிகளை போட்டியின் அதிகாரப்பூர்வ சின்னங்களாக அறிமுகப்படுத்தியது.

✓ தேஜஸ், புத்திசாலித்தனம் மற்றும் ஆற்றலைக் குறிப்பதாகவும், தாரா, வழிகாட்டுதல் மற்றும் விருப்பத்தைக் குறிப்பதாகவும் உள்ளன.

➢ **குடியரசுத் தலைவரின் சுதந்திரப் பதக்கம் (Presidential Medal of Freedom)**

✓ லியோனல் மெஸ்ஸி, ‘குடியரசுத் தலைவரின் சுதந்திரப் பதக்கம்’ வென்ற முதல் ஆண்கள் கால்பந்து வீரர் என்ற பெருமையைப் பெற்றார். லியொனல் மெஸ்ஸிக்கு அமெரிக்காவின் உயரிய குடிமகன் விருதான ஜனாதிபதி பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.



- ✓ அமெரிக்காவின் செழிப்பு, மதிப்புகள் அல்லது பாதுகாப்பு, உலக அமைதி அல்லது பிற வகையில் சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்களித்த நபர்களுக்கு இந்தப் பதக்கம் வழங்கப்படுகிறது.
- ✓ மேகன் ராபினோவுக்குப் பிறகு ஜனாதிபதி விருதை வெல்லும் இரண்டாவது விளையாட்டு வீரர் இவர் ஆவார். அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இந்த விருதை அவருக்கு வழங்கினார்.

## ➢ கோகோ உலகக் கோப்பை

- ✓ கோ கோ உலகக் கோப்பையின் முதல் பதிப்பு புதுதில்லி இந்திரா காந்தி உள் விளையாட்டு அரங்கில் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டது. துணை குடியரசுத் தலைவர் ஜக்தீப் தங்கர், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பி.டி. உஷா மற்றும் இந்திய கோகோ கூட்டமைப்பின் தலைவர் சுதன்ஷு மிட்டல் ஆகியோர் உலகக் கோப்பையின் சம்பிரதாயமான ஜோதியை ஏற்றி வைத்தனர்.




- ✓ கோகோ உலகக் கோப்பை 2025இல் 20 நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்கேற்கின்றன.
- ✓ கோகோ உலகக் கோப்பை 2025இல் 20 ஆண்கள் மற்றும் 19 பெண்கள் அணிகள் இடம்பெற்றுள்ளன.
- ✓ இந்தியக் கோகோ கூட்டமைப்பு மூலம் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு பிரிவுகளுக்கும் 15 பேர் கொண்ட அணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- ✓ ஆண்கள் அணிக்கு பரதீக் வைகர் தலைவராக உள்ளார்.
- ✓ பெண்கள் அணிக்கு பிரியங்கா இங்கிள் தலைமை தாங்குவார்.

## ➢ கோ கோ உலகக் கோப்பை

- ✓ ஜனவரி 19 அன்று இந்திரா காந்தி உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற கோ கோ 2025 உலகக் கோப்பையின் தொடக்கப் போட்டியில் இந்திய மகளிர் அணி சாம்பியன் பட்டத்தை வென்று வரலாறு படைத்தது.




- ✓ விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் நேபாளத்தின் மீது இந்திய மகளிர் அணி ஆதிக்கம் செலுத்தி, 78-40 என்ற அபார புள்ளிகளுடன் வெற்றியை உறுதி செய்தது.
- ✓ அதே நாளில், ஜனவரி 19 அன்று நடைபெற்ற கோ கோ உலகக் கோப்பையை வெல்வதற்கான விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் நேபாளத்தை 54-36 என்ற புள்ளிக் கணக்கில் வென்றதன் மூலம், இந்திய ஆண்கள் அணி, இந்திய மகளிர் அணியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி. இந்தியாவுக்கு மீண்டும் ஒரு வரலாற்று வெற்றிப் பெற்றுத் தந்தது.

- ➢ **38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள்**
- ✓ ஜனவரி 28 அன்று, டேராடூனில் உள்ள மகாராணா பிரதாப் மைதானத்தில் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.




- ✓ இந்தப் போட்டிகள் இந்தியாவின் வெள்ளி விழா ஆண்டில், உத்தரகாண்டில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
- ✓ உத்தரகாண்ட் மாநிலத்தில் 8 மாவட்டங்களில் உள்ள 11 நகரங்களில் ஜனவரி 28 முதல் பிப்ரவரி 14 வரை இந்தப் போடடிகள் நடைபெறும்.
- ✓ இந்த தேசிய விளையாட்டுப் போட்டிகளில் 36 மாநிலங்களும் ஒரு யூனியன் பிரதேசமும் பங்கேற்கும். 17 நாட்கள் நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டிகளில் 35 விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.
- ✓ நிலைத்தன்மையை மையமாகக் கொண்டு, இந்த ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டிகள், 'பசுமை விளையாட்டுகள்' என்ற கருப்பொருளில் நடத்தப்படுகின்றன.

# நினைவில் நின்றவர்கள்

➢ **டாக்டர். ராஜகோபால் சிதம்பரம்**

✓ மூத்த அணு விஞ்ஞானி டாக்டர். ராஜகோபால சிதம்பரம் தனது 88வது வயதில் காலமானார்.




✓ இந்தியாவின் அணு ஆயுதத் திட்டத்தில் டாக்டர். சிதம்பரம் முக்கிய பங்கு வகித்தார்.

✓ 1974இல் இந்தியாவின் முதல் அணுகுண்டு சோதனை மற்றும் 1998இல் பொக்ரான்-2 சோதனைகளில் அவர் முக்கிய பங்காற்றினார்.

✓ இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர், பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் மற்றும் அணுசக்தி ஆணையத்தின் தலைவர் உட்பட பல முக்கிய அறிவியல் மற்றும் மூலோபாய பதவிகளில் அவர் பணியாற்றியுள்ளார்.

➢ **உலகின் மிகவும் வயதான நபர், டொமிகோ இடுகா, 116 வயதில் மரணம்**

✓ உலகின் மிக வயதான நபராக கின்னஸ் உலக சாதனையால் அங்கீகரிக்கப்பட்ட ஜப்பானியப் பெண்மணி, டொமிகோ இடுகா, ஜனவரி 2025இல் தனது 116வது வயதில் காலமானார்.




✓ மே 1908இல் பிறந்த அவர், உலகப் போர்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் சமூக மாற்றங்கள் உட்பட முக்கிய வரலாற்று நிகழ்வுகளின்போது வாழ்ந்த ஒரு அசாதாரண வாழ்க்கையை அனுபவித்துள்ளார்.

- ✓ அவரது மரபு, அவரது நெகிழ்வுத் தன்மை மற்றும் நீண்ட ஆயுளால் தொடர்ந்து ஊக்கமளிப்பதாக உள்ளது.

- ➢ **பிரபல இருதய அறுவை சிகிச்சை நிபுணர் கே.எம். செரியன் காலமானார்**
- ✓ இந்தியாவின் முதல் கரோனரி பைபாஸ் மற்றும் இதய நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையை செய்தவராகிய டாக்டர்.கே.எம். செரியன், ஜனவரி 25, 2025 அன்று பெங்களுருவில் காலமானார்.




- ✓ அவர் மேம்பட்ட இருதய ஆராய்ச்சிக்காக ஃபிரான்டியர் லைஃப்லைன் மருத்துவமனை மற்றும் ஃபிரான்டியர் மெடிவில்லே-ஐ நிறுவினார்.
- ✓ அவரது வாழ்க்கை வரலாறு, 'வெறும் ஒரு கருவி' (Just an Instrument) அவர் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு வெளியிடப்பட்டது.

# அறிக்கைகள்

➢ **ஐ.நா அறிக்கை: இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (GDP Growth) 2024இல் 6.2 விழுக்காடாக இருக்கும்**

✓ பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் 2024 அறிக்கையானது, வரும் ஆண்டில் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சியை 6.2 விழுக்காடு ஆகக் கணித்து, இந்தியாவை ஒரு முக்கிய நாடாக வெளிப்படுத்தியுள்ளது.




✓ இது, 2023ஆம் ஆண்டிற்கான 6.3 விழுக்காடு மதிப்பீட்டை விட சற்று பின்தங்கியுள்ளது. இது நாட்டின் வலுவான உள்நாட்டுத் தேவை மற்றும் செழித்து வரும் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு ஒரு சான்றாக விளங்குகிறது.

✓ இந்தியாவின் திறமையால் இயக்கப்படும் தெற்காசியா, 2023இல் பாராட்டத்தக்க 5.3 விழுக்காடு வளர்ச்சிக்குப் பிறகு, 2024இல் 5.2 விழுக்காடு ஜிடிபி எழுச்சியைக் காணும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

➢ **இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சாதனை 2024**

✓ 24.5 ஜிகாவாட் சூரிய சக்தி மற்றும் 3.4 ஜிகாவாட் காற்றாலை ஆகிய கூடுதல் திறன்களுடன் 2024இல் இந்தியா ஒரு சாதனை மைல்கல்லை எட்டியுள்ளது.




✓ ஜனவரி 2025 நிலவரப்படி இந்தியாவின் மொத்த புதைபடிவ எரிபொருள் ஆற்றல் திறன் 217.62 ஜிகாவாட்டாக உள்ளது.

✓ 2030க்குள் 500 ஜிகாவாட் புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான எரிசக்தி திறன் என்ற இலக்கை இந்தியா அடையும் நிலையில் உள்ளது.

- ✓ 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2024ஆம் ஆண்டில், சூரியமின் நிறுவல்களில் இந்தியா இருமடங்கு அதிகரிப்பையும், காற்றாலை நிறுவல்களில் 21 விழுக்காடு உயர்வையும் கண்டுள்ளது.
- ✓ இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனில், இப்போது சூரிய ஆற்றலின் பங்கு 47 விழுக்காடு ஆகும்.
- ✓ மேற்கூரை சூரியசக்தித் துறையானது 53 விழுக்காடு வளர்ச்சியடைந்துள்ளது. இது 4.59 ஜிகா வாட் புதிய திறனைச் சேர்த்தது. குஜராத், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவை காற்றாலை ஆற்றலின் புதிய 3.4 ஜிகாவாட் திறனில் 98 விழுக்காட்டுக்கு பங்களிக்கின்றன.

➢ **ஆண்டு கல்வி நிலை அறிக்கை (Annual Status of Education Report) 2024**

- ✓ ஆண்டு கல்வி நிலை அறிக்கை 2024, கிராமப்புற இந்தியாவில் கல்வி தொடர்பான கண்டுபிடிப்புகளை வெளிப்படுத்தியுள்ளது.

- ✓ இந்த அறிக்கை, கற்றல் நிலைகளில் முன்னேற்றம் மற்றும் பள்ளி சேர்க்கை முறைகளில் மாற்றங்களைக் குறிக்கிறது.
- ✓ ஆண்டு கல்வி நிலை அறிக்கை 2024, அரசுப் பள்ளி மாணவர் சேர்கையில் சரிவைக் குறிக்கிறது. இது 2018இல் காணப்பட்ட அளவைப் போலவே 66.8 விழுக்காடாக உள்ளது.
- ✓ இருப்பினும், தனியார் பள்ளிகளின் சேர்க்கை அதிகரித்து வருகிறது. இது கல்வி விருப்பங்களில் மாற்றத்தை பிரதிபலிக்கிறது.
- ✓ உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் கற்றல் நிலைகளில் குறிப்பிடத்தக்க மீட்சியைக் காட்டியுள்ளன என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

➢ **சர்வதேச செயற்கை நுண்ணறிவு (ஏஐ) பாதுகாப்பு அறிக்கை**

- ✓ 2025இல் வெளியிடப்பட்ட சர்வதேச செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு அறிக்கை, வேகமாக வளர்ந்துவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களுடன் தொடர்புடைய முக்கியமான சவால்களை கோடிட்டுக் காட்டுகிறது.




- ✓ இந்த விரிவான ஆவணம், வேலை இட மாற்றம், சுற்றுச் சூழல் பாதிப்பு மற்றும் பாதுகாப்பு அபாயங்கள் உள்ளிட்ட பல்வேறு அச்சுறுத்தல்களைக் குறிப்பிடுகிறது.
- ✓ 2023 உலகளாவிய ஏஐ பாதுகாப்பு உச்சி மாநாட்டின்போது நடைபெற்ற விவாதங்களின் தொடர்ச்சியாக இந்த அறிக்கை உருவாகியுள்ளது.
- ✓ நிதி மோசடி மற்றும் தீங்கு விளைவிக்கும் டிஜிட்டல் உள்ளடக்கத்தை உருவாக்குதல் உள்ளிட்ட டீப்ஃபேக் தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தப்படுவதை இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

APOLLO STUDY CENTRE

# தரவரிசைப் பட்டியல்

- **இந்தியா தற்போது உலகின் ஏழாவது பெரிய காபி உற்பத்தியாளராக உள்ளது**

✓ கடந்த ஆண்டில் இந்தியாவின் காபி ஏற்றுமதியில் 1.29 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.




✓ வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, இது 2020-21இல் ஏற்றுமதியான 719 மில்லியன் டாலர்களைவிட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகம் ஆகும்.

✓ இந்த மாதத்தின் முதல் பாதியில் 9300 டன் காபி விற்பனையானது. இத்தாலி, பெல்ஜியம் மற்றும் ரஷ்யா ஆகியவை இந்தியாவின் முதன்மையான இறக்குமதியாளர்களாக இருந்தன.

✓ இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி வறுக்கப்படாத காபி பீன்ஸ் ஆகும்.

✓ 2022-23ஆம் ஆண்டில் 248,000 மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு, காபி உற்பத்தியில் கர்நாடகா முதலிடத்திலும், தமிழ்நாடு மற்றும் கேரளா அடுத்தடுத்த இடங்களையும் பிடித்தன.

- **உலகளாவிய இராணுவ ஆற்றல் குறியீடு (Global Firepower Index) 2025**

✓ உலகளாவிய இராணுவ ஆற்றல் குறியீடு 2025இன்படி, உலகின் நான்காவது சக்தி வாய்ந்த இராணுவமாக இந்தியா தொடர்ந்து தர வரிசையில் உள்ளது.




✓ இந்தத் தரவரிசையானது இந்தியாவின் குறிப்பிடத்தக்க இராணுவ திறன்களை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இது அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக உள்ளது.

# முக்கிய தினங்கள்

| நாள் | தினம் | மையக் கருத்து |
|---|---|---|
| ஜனவரி 01 | உலகளாவிய குடும்ப தினம் | 2025ஆம் ஆண்டின் உலகளாவிய குடும்ப தினத்தின் கருப்பொருள், "ஒரே உலகம், ஒரே குடும்பம் : தலைமுறைகள் முழுவதும் இணைந்து இருத்தல்" என்பதாகும். |
| ஜனவரி 02 | உலக உள்முக சிந்தனை தினம் | மையக் கருத்து 2025: இரைச்சல் நிறைந்த உலகில் சிறிது அமைதியும் நிதானமும் |
| ஜனவரி 04 | உலக பிரெய்லி தினம் | 2024ஆம் ஆண்டின் உலக பிரெய்லி தினத்தின் கருப்பொருள், "பார்வையில்லாத மற்றும் பார்வையற்ற நபர்களை அணுகுதல்" என்பதாகும். |
| ஜனவரி 05 | தேசிய பறவைகள் தினம் | 2024 மையக் கருத்து: நமது பறவைகளைப் பாதுகாத்தல், நமது எதிர்காலத்தைப் பாதுகாத்தல். |
| ஜனவரி 06 | போர் அனாதைகள் உலக தினம் | உலக போர் அனாதைகள் தினம் இரண்டு சக்திவாய்ந்த கருப்பொருள்களுடன் அனுசரிக்கப்படுகிறது: "அனாதைகளின் வாழ்க்கை முக்கியம்" மற்றும் "போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக எழுந்து நிற்பது" |
| ஜனவரி 08 | பூமியின் சுழற்சி நாள் | மையக்கருத்து: "காஸ்மிக் ரிதம்ஸ் - பிரபஞ்சத்தின் நடனத்தைத் தழுவுதல்" |
| ஜனவரி 09 | பிரவாசி பாரதிய திவாஸ் | இந்த ஆண்டு பிரவாசி பாரதிய திவாசின் கருப்பொருள், 'விக்சித் பாரதத்திற்கு புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பு" என்பதாகும். |
| ஜனவரி 10 | உலக ஹிந்தி தினம் | உலக ஹிந்தி தினத்தின் கருப்பொருள்: "ஹிந்தி – பாரம்பரிய அறிவு மற்றும் செயற்கை நுண்ணறிவை இணைத்தல்" |
| ஜனவரி 11 | தேசிய மனிதக் கடத்தல் விழிப்புணர்வு தினம் | இந்த உலகளாவிய நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய அவசியத்தையும், பாதிக்கப்பட்டவர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு முற்றுப் பள்ளி வைக்க வேண்டியதன் அவசியத்தையும் இந்த நாள் நினைவுபடுத்துகிறது. |

| | | |
|---|---|---|
| ஜனவரி 12 | தேசிய இளைஞர் தினம் | மையக் கருத்து: நிலையான எதிர்காலத்திற்கான இளைஞர்கள்: நெகிழ்வு மற்றும் பொறுப்புடன் தேசத்தை வடிவமைத்தல் |
| ஜனவரி 15 | இந்திய இராணுவ தினம் | மையக் கருத்து: ‘‘சமர்த் பாரத், சக்ஷம் சேனா’’ இது ‘‘திறமையான இந்தியா, அதிகாரம் பெற்ற இராணுவம்’’ என மொழிபெயர்க்கப்படுகிறது. |
| ஜனவரி 16 | தேசிய தொடக்க நாள் | மையக் கருத்து: எதிர்காலத்தை ஒன்றாக வடிவமைப்போம் - ஒரு நேரத்தில் ஒரு புதுமையான யோசனை |
| ஜனவரி 23 | பராக்கிரம தினம் (வீர தினம்) | மையக் கருத்து: தைரியம், உறுதிப்பாடு மற்றும் தேசபக்தி |
| ஜனவரி 24 | தேசிய பெண் குழந்தைகள் தினம் | மையக் கருத்து: ‘பிரகாசமான எதிர்காலத்திற்காக பெண்களை மேம்படுத்துதல். |
| ஜனவரி 24 | சர்வதேச கல்வி தினம் | இந்த ஆண்டு, ஏழாவது சர்வதேச கல்வி தினம், ‘செயற்கை நுண்ணறிவு மற்றும் கல்வி: தன்னியக்க உலகில் மனித முகமையைப் பாதுகாத்தல்’ என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்படுகிறது. |
| ஜனவரி 25 | தேசிய வாக்காளர் தினம் | இந்த ஆண்டின் மையக் கருத்து: ‘வாக்களிப்பதைப் போல எதுவும் இல்லை. நான் நிச்சயமாக வாக்களிக்கிறேன்’ பங்கேற்பு ஜனநாயகத்தை வலியுறுத்துகிறது. |
| ஜனவரி 25 | தேசிய சுற்றுலா தினம் | இந்த ஆண்டு தேசிய சுற்றுலா தினத்தின் கருப்பொருள், ‘உள்ளடங்கிய வளர்ச்சிக்கான சுற்றுலா’ என்பதாகும். |
| ஜனவரி 26 | இந்தியாவின் 75வது குடியரசு தினம் | மையக் கருத்து: கோல்டன் இந்தியா: பாரம்பரியம் மற்றும் மேம்பாடு. |
| ஜனவரி 26 | சாவதேச தூய ஆற்றல் தினம் | 2025ஆம் ஆண்டு சர்வதேச தூய்மையான ஆற்றல் தினத்தின் கருப்பொருள், ‘‘ஒரு பிரகாசமான எதிர்காலத்திற்கான தூய்மையான ஆற்றல்’’ என்பதாகும். |
| ஜனவரி 26 | சர்வதேச சுங்க தினம் | சர்வதேச சுங்க தினம் 2025இன் கருப்பொருள்: சுங்கம் செயல்திறன், பாதுகாப்பு மற்றும் செழிப்புக்கான அதன் உறுதிப்பாட்டை வழங்குகிறது. |
| ஜனவரி 27 | பெரும் இன அழிப்பால் பாதிக்கப்பட்டவர்களின் சர்வதேச நினைவு | இந்த நாள் பெரும் இன அழிப்பின் கொடூரங்கள் மற்றும் வெறுப்பு, மதவெறி மற்றும் இனவெறிக்கு எதிராக அதன் அனைத்து வடிவங்களையும் எதிர்த்துப் |

| | | |
|---|---|---|
| | தினம் | போராடுவதற்கான நீடித்த தேவையின் ஒரு கடுமையான நினைவூட்டலாக விளங்குகிறது. |
| ஜனவரி 27 | தேசிய புவியியல் தினம் | மையக் கருத்து: பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான ஆய்வு |
| ஜனவரி 28 | இந்திய செய்தித்தாள் தினம் | மையக் கருத்து: டிஜிட்டல் யுகத்தில் அச்சு ஊடகத்தின் பங்கு |
| ஜனவரி 28 | உலக தொழுநோய் தினம் | 2024 உலக தொழுநோய் தினத்தின் கருப்பொருள், "தொழுநோயை வெல்வோம்". |
| ஜனவரி 30 | தியாகிகள் தினம் அல்லது ஷஹீத் திவாஸ் | மகாத்மா காந்தியின் 77வது நினைவு தினம் மற்றும் தியாகிகள் தினத்தை நாடு கொண்டாடியது. |
| ஜனவரி 30 | உலக புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் தினம் | இந்த ஆண்டு அனுசரிப்பதற்கான கருப்பொருள், "ஒன்றுபடுவோம், செயல்படுவோம் மற்றும் புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்களை ஒழிப்போம்" புறக்கணிக்கப்பட்ட சமூகத்திற்கான ஒரு சக்திவாய்ந்த அழைப்பாக செயல்படுகிறது. |

APOLLO STUDY CENTRE

## CURRENT AFFAIRS - TNPSC ORIGINAL QUESTIONS & ANSWERS – EXAMS CONDUCTED IN NOVEMBER, 2024

## UNIT – II - CURRENT EVENTS

## COMBINED TECHNICAL SERVICES EXAMINATION IN DIPLOMA/ITI LEVEL
## DOE : 09/11/2024 (FN) AND 11/11/2024 TO 16/11/2024

### Economics

1. Match correctly the Geographical Indication (GI) Tags of Tamil Nadu with their place and production

A. Nagercoil — 1. Kuthuvilakku
B. Erode — 2. Bronze Icons
C. Swamimalai — 3. Turmeric
D. Nachiarkovil — 4. Temple Jewellery

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 2 | 4 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| **c.** | **4** | **3** | **2** | **1** |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. Answer not known

தமிழ்நாட்டின் புவிசார் குறியீடுகளை அவற்றின் இடம் மற்றும் உற்பத்தியுடன் சரியாகப் பொருத்தவும் :

A. நாகர்கோவில் — 1. குத்துவிளக்கு
B. ஈரோடு — 2. வெண்கலசிலைகள்
C. சுவாமிமலை — 3. மஞ்சள்
D. நாச்சியார்கோவில் — 4. கோவில் நகைகள்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 2 | 4 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| **c.** | **4** | **3** | **2** | **1** |
| d. | 4 | 2 | 3 | 1 |

e. விடைதெரியவில்லை

## Latest diary of events

2. Which of the following statements are true about G20?

i. European union is a member of G20

ii. The G20 summit for the year 2023 was held at new Delhi.

iii. The G20 summit for the year 2022 was held at Brazil.

iv. The motto of G20 summit for the year 2023 is "people, planet, prosperity".

a. i and iii only **b. i and ii only** c. ii and iii only

d. ii and iv only e. Answer not known

G20 பற்றிய கீழ்காணும் கூற்றுகளில் எவை சரியானவை ?

i. ஐரோப்பிய ஒன்றியம் G20ன் ஒரு உறுப்பினர்.

ii. 2023 ஆம் ஆண்டிற்கான G20 மாநாடு புது தில்லியில் நடைபெற்றது.

iii. 2022 ஆம் ஆண்டிற்கான G20 மாநாடு புது பிரேசிலில் நடைபெற்றது.

iv. 2023 ஆம் ஆண்டிற்கான G20 மாநாட்டின் குறிக்கோள் "மக்கள், உலகம் செழிப்பு ஆகும்.

a. i மற்றும் iii மட்டும் **b. i மற்றும் ii மட்டும்** c. ii மற்றும் iii மட்டும்

d. ii மற்றும் iii மட்டும் e. விடை தெரியவில்லை

## Places in news

3. Tamil Nadu's First Biodiversity heritage site is ________

a. Ettimangalam b. Ayyapatti **c. Arittapatti** d. Kallampatti
e. Answer not known

தமிழ்நாட்டின் முதல் பாராம்பரிய பல்லுயிர் தளம் எது?

a. எட்டிமங்கலம் b. அய்யப்பட்டி **c. அரிட்டாபட்டி** d. கள்ளம்ப்பட்டி
e. விடை தெரியவில்லை

## Awards and Honours

4. Who among the following wins " International Booker Prize" in 2023?

**a. GeorgiGospodinov** b. Tina Turner c. Kumar Srivastava
d. ShashiTharoor e. Answer not known

பின்வருபவர்களில் 2023 இல் சர்வதேச புக்கர் பரிசை வென்றவர் யார்?

**a. ஜார்ஜி கோஸ்போடினேவ்** b. டினாடர்னர் c. குமார் ஸ்ரீவஸ்தவா
d. சசிதரூர் e. விடை தெரியவில்லை

## Sports

5. How many games were enlisted and organized Khelo India 2023?

a. 25 b. 26 **c. 27** d. 28 e. Answer not known

கேலோ இந்தியா 2023-யில் எத்தனை விளையாட்டுகள் இருந்தன ?

a. 25 b. 26 **c. 27** d. 28 e. விடை தெரியவில்லை

## Latest inventions in Science and Technology

6. Which one of the following statements is true about Gaganyaan Project?

a. It is the space probe orbiting mars since 2014
**b. It is designed to carry humans to space**
c. It is expected to orbit the earth at 36000 km altitude
d. It is aimed at solar research
e. Answer not known

ககன்யான் திட்டம் பற்றிய கீழ்க்காணும் கூற்றுக்களுள் எது சரியானது?

a. அது செவ்வாய் கிரகத்தை 2014 முதல் சுற்றிவரும் விண்ணாய்வி ஆகும்
**b. இது மனிதர்களை விண்வெளிக்கு எடுத்துக் செல்ல வடிவமைக்கப்பட்டது**
c. இது பூமியை 36000 கி.மீ உயரத்தில் சுற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது

d. இது சூரியஆய்வை இலக்காகக் கொண்டது
e. விடை தெரியவில்லை

7. Potsherds inscribed with _____ script have been unearthed in Keeladi.
a. Tamil - Aayudha script b. Tamil - Mei script
c. Tamil - Uyirmei script
**d. Tamil - Brahmi script** e. Answer not known
கீழடியில் ______எழுத்துப் பொறிப்புகள் கொண்ட பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
a. தமிழ் - ஆயுத எழுத்து b. தமிழ் - மெய் எழுத்து
c. தமிழ் - உயிர்மெய் எழுத்து
**d. தமிழ் - பிராமிஎழுத்து** e. விடை தெரியவில்லை

**COMBINED TECHNICAL SERVICES EXAMINATION (INTERVIEW POSTS) – II**
**18.11.2024**

## Latest inventions in Science and Technology

1. Cotton ace app is
**a. An Artificial Intelligence based pest management system**
b. An Artificial Intelligence based Covid detection application software
c. An Artificial Intelligence based attendance monitoring system
d. An Artificial Intelligence based Health management information system.
e. Answer not known
காட்டன் ஏஸ் செயலி என்பது
a. செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் பூச்சி மேலாண்மை அமைப்பு
b. செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் கொரோனாவை கண்டுபிடிக்க பயன்படுத்தும் பயன்பாட்டு மென்பொருள்
e. விடைதெரியவில்லை

## Economics

2. An institute which recently launched North India's first human DNA Bank under 'Make in India' Initiative
a. IIT, Kanpur b. IIT, Chennai
c. Delhi University, New Delhi **d. Banaras Hindu University, Varanasi**
e. Answer not known

‘மேக் இன் இந்தியா’முயற்சியின் கீழ் வட இந்தியாவின் முதல் மனித டி.என்.ஏ வங்கியினை சமீபத்தில் அறிமுகப்படுத்திய கல்வி நிறுவனம்.

a. ஐ.ஐ.டி. கான்பூர்

b. ஐ.ஐ.டி, சென்னை

c. டெல்லி பல்கலைக்கழகம், புதுடெல்லி

d. பனாரஸ் இந்து பல்கலைக் கழகம், வாரணாசி

e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE